வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 14.06.2023 புதன்கிழமை இதழ் : 187 பக்கங்கள் : 16

# வடக்கு காற்றாலை மின் திட்டம் 2024இற்குள் நிறைவேற்றப்படும்

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர



கொழும்பு, ஜூன் 14

இந்தியாவின் அதானி நிறுவனம் வடக்கு மாகாணத்தில் மன்னார், பூநகரியில் அமைக்கவுள்ள காற்றாலை மின் சக்தி திட்டப் பணிகள் 2024 டிசெம்பருக்கு முன்னர் நிறைவேறும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

15

## பிரிட்டனில் நடந்த விபத்தில் 3 ஈழத் தமிழ் பெண்கள் பலி!

லண்டன், ஜூன் 14


இங்கிலாந்தின் தென் கிழக்கு பிரதேசத்தில் மேற்கு சசெக்ஸ் பகுதியில் இரண்டு கார்கள் மோதுண்ட விபத்தில் ஈழத் தமிழர்கள் மூவர் உயிரிழந்தனர். நால்வர் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார். உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாயும் மகளும் அடங்குவர்.

ஏ-285 வீதியில் சிசெஸ்டர் பகுதியில் சனிக்கிழமை மாலை இந்த கோர விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பி. எம். டபிள்யூ., மேர்சிடஸ் ஆகிய இரண்டு கார்கள் மோதிய

15

## சப்ரகமுவ ஆளுநராக நவீன் சத்தியபிரமாணம்!



கொழும்பு, ஜூன் 14

சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சத்தியப் பிரமாண நிகழ்வின் பின்னர் கருத்து தெரிவித்த நவீன் திஸநாயக்க,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிற்காக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின்

15

## யூரியாவின் விலை குறையும்

கொழும்பு, ஜூன் 14

யூரியாவின் விலை 9 ஆயிரம் ரூபாயாக குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதனால், நாளை வியாழக்கிழமை முதல் யூரியாவின் விலை குறைவடையும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

யூரியா உரத்தின் விலையை குறைப்பதற்கான தீர்மானத்தை அதற்காக நியமிக்கப்பட்ட விலை நிர்ணயக் குழு

15

## ஜனாதிபதியின் கொள்கையை செயலாக்க பெரமுன கட்சியின் ஒத்துழைப்பு அவசியம்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியவற்றுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவை அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். ஜனாதிபதியின் கொள்கைகளை செயல்படுத்த எமது ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி - ரத்கமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன் அரசமைப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தோம். ராஜபக்ஷர்கள் மீது திட்டமிட்ட வகையில் போலிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பொருளாதார முன்னேற்றம், அரசியல் உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ஜனாதிபதிக்கு

15

## பதவிக் காலம் நிறைவடைந்தே பணிப்பாளர் பதவி விலகினார்

### அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

கொழும்பு, ஜூன் 14

பேராசிரியர் அநுர மானதுங்கவின் ஒப்பந்த காலம் நிறைவடைந்ததாலேயே அவர் பதவி விலகினார். அவரின் கடிதத்தை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஏற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பெயரால் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் வரலாற்று அழிப்பு, காணி

15



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய நேற்று காலை முருகப்பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெற்றது

அதனை தொடர்ந்து மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் இடம்பெற்று முருகப் பெருமான் வள்ளி,தெய்வானை சகிதம் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

(படம் : ஐ.சிவசாந்தன்)

## யாழ்ப்பாணம்,கல்முனையில் விமான பறப்பியல் கல்லூரிகள்

கொழும்பு, ஜூன் 14

யாழ்ப்பாணம், கல்முனையில் சிறீலங்கன் எயார்லைன்ஸின் பறப்பியல் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை பறப்பியல் கல்லூரி தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மாணவர்கள் பறப்பியல் கல்வியை இங்கு தொடரவர்.

சர்வதேச, ஐரோப்பிய விமானப் போக்குவரத்து அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை இலங்கை பறப்பியல் கல்லூரி வழங்கி வருகின்றது.

தற்போது கட்டுநாயக்க விமானநிலையத்தில் மட்டுமே இந்தக் கல்லூரி செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு கடற்றொழிலாளர்களை இந்திய பிரதமர் காக்கவேண்டும்

### துணைத் தூதுவர் ஊடாக மனு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு கடற்றொழிலாளர்களை பாதுகாப்பதற்கு இந்திய பிரதமர் மோடி ஆவன செய்ய வேண்டும் என்று கோரி யாழ். மாவட்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் அவருக்கு மனு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவரை மீனவர் பிரதிநிதிகள் நேற்று சந்தித்துப் பேசினர். இதன்போதே இந்திய பிரதமர் மோடிக்கு மனுவையும் வழங்கினர்.

இது தொடர்பில் சந்திப்பில் பங்கேற்ற கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதி அ. அன்னராசா

15

## அடுத்த இரு மாதங்களில் மருந்து விலை குறையும்!

### அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

அடுத்த இரு மாதங்களில் மருந்துப் பொருட்களின் விலையை குறைக்கவும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவும் சாத்தியம் உள்ளது என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாளை வியாழக்கிழமை முதல் மருந்து பொருட்களின் விலையை 16 வீதத்தால் குறைப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், 3 மாதங்களுக்கு ஒருமுறை மருந்தின் விலையை மீளாய்வு செய்து விலையை மேலும்

15

# மகிந்தவின் அரசியல் ஆளுமை கோட்டாவிடம் இருக்கவில்லை!

ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, ஜுன் 14

மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் ஆளுமை கோட்டாபய ராஜபக்ஷவிடம் இருந்திருந்தால் பொதுஜன பெரமுன தலைமை யிலான அரசாங்கம் இன்றும் நிலைத்திருந்திருக்கும். பொது ஜன பெரமுனவை புறக்கணித்து இனிவரும் காலங்களில் எவராலும் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

களுத்துறை - அளுத்கமவில் நடந்த சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் 2019ஆம் ஆண்டு ஆட்சி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பை எம்மால் நிறை வேற்ற முடியவில்லை. நிறைவேற்றுத்துறையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயல் பட முடியாது. ஜனாதிபதி எடுத்த ஒரு சில தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்து பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் அரசியல் ஆளுமை கோட்டாபயவுக்கு இருந்திருந்தால் பொதுஜன பெரமுன தலைமை யிலான அரசாங்கம் இன்றும் ஆட்சியில் இருந்திருக்கும். பொருளாதார பாதிப்பு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வீதிக்கு இறங்கி போராடினார்கள். மக்கள் போராட்டத்தை குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயல்படுபவர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் காரணமாகவே பொது ஜன பெரமுனவினரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

பொதுஜன பெரமுனவை புறக்கணித்து செயல்பட ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். பொதுஜன பெரமுன அரசியலில் என்றும் இரண்டாம் பட்ச மாகாது. எமது ஆதரவு இல்லாமல் இனிவரும் காலங்களில் எவருக்கும் அரசாங்கத்தை அமைக்கவும் முடியாது - என்றார். (ஐ)

# ரெலிகொம் தனியார் மயமாக்குவதால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

கொழும்பு, ஜுன் 14

ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதென தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையானது கற்பனைகளின் மையமாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தேசிய பாதுகாப்பு என்ற சொல்லை அவர்கள் போராட்டத்துக்கான தொனிப்பொருளாக மாற்றிக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் தயாரிக்கப்படும் '101கதா' கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

துறையாசார் நிபுணர்களிடத்தில் ஆலோசிக்காமல் இவ்வாறானதோர் அறிக்கையை தயாரித்துள்ளமை துறைசார் மேற்பார்வை குழுவின் நியதிகளுக்கு புறம்பான தெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# டி. ஐ. ஜி. அஜித் ரோகணவிடமும் மனித உரிமை குழு விசாரணை

கொழும்பு, ஜுன் 14

மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்றைய தினம் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக முன்னிலையாகியிருந்தார்.

கடந்த வருடம் மே 09ஆம் திகதியும் அதன் பின்னரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற அமைதியின்மையின் போது வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க செய்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகளுக்காகவே அஜித் ரோஹண மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்த பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்ட விசேட குழுவில் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவும் அங்கம் வகிக்கின்றார்.

தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் தெரிய வந்த சந்தேகநபர் தொடர்பான அறிக்கையை, எதிர்வரும் வியாழக்கிழமை ஆணைக்குழுவில் வழங்குமாறு தெரிவித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதியும் அதனை அண்மித்த நாட்களிலும் தமது சொத்துகள், வீடுகளுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 70 பேரிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஏ- வீதியில் பாரவூர்தி மின்கம்பத்துடன் மோதியது!



பளை, ஜுன் 14

பளை பொலிஸ் பிரிவின் முல்லையடி பகுதியில் யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று விபத்துக்கு உள்ளானது.

யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஏ- 9 வீதி அருகே முல்லையடி பகுதியில் மின் கம்பத்துடன் மோதி வீட்டின் மதில் மேல் விழுந்து விபத்துக்கு உள்ளானது.

இச்சம்பவமானது நேற்றுக் காலை 6. 45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குடும்ப வன்முறை தடுப்பு சட்டமூலம் தயாரிக்க அனுமதி!

கொழும்பு, ஜுன் 14

2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறை செயல் தடுப்பு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக 2018. 03. 06 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குடும்ப வன்முறை செயல் தடுப்பு (திருத்தச்) சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

இதற்கமைய, சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# ஐந்து மாவட்டங்களில் மீண்டும் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜுன் 14

மட்டக்களப்பு, கண்டி, குருநாகல், புத்தளம், காலி மாவட்டங்களில் மீண்டும் டெங்கு காய்ச்சல் அபாயம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் மழையுடனான வானிலையுடன் இந்த நிலைலை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 43346 பேர் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் 21654 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன கூறினார். (அ)

# கலாசார நல்லிணக்கம் தொடர்பான திரைப்படங்கள் காட்சியிடல் நாளை!

கொழும்பு, ஜுன் 14

கலாசார நல்லிணக்கத்தை மக்கள் மயமாக்கும் உலகத்தரம் வாய்ந்த திரைப்படங்களை திரையிடுதல் மற்றும் அது தொடர்பான கலந்துரையாடலின் ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை நீதி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மாதத்தில் ஒரு தினம் அனைத்து செயலகங்களிலும் திரையிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை வாழ் மக்கள் பல்லின, பல மத, கலாசார மற்றும் மொழிகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அனைத்து இனங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையில் சமாதானம் நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்துவதை அரசாங்கத்தின் முன்னணி நடவடிக்கையாக கருதி நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் சிந்தனைக்கு அமைய மாவட்டம், மாகாணம் மற்றும் பிரதேச மட்டத்தில் அனைத்து மாகாண செயலாளர் அலுவலகங்களிலும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் கலாசாரம் நல்லிணக்கத்தை மக்கள் மயமாக்கும் உலக தரம்வாய்ந்த திரைப்படம் ஒன்றை திரையிட்டு, அது தொடர்பில் அறிவுபூர்வமான கருத்தாடல் வேலைத்திட்டம் மூலம் மக்களை அறிவுறுத்தும் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9,30 மணிக்கு நீதி அமைச்சு அலுவலக கேட்போர் கூடத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ் தலைமையில் இடம் பெற இருக்கிறது. கறுப்பு, வெள்ளை இனப்பிரச்னையை சமாதானப்படுத்திய தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சமூக சிந்தனைகளை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள 'இன்விக்ரஸ்' என்ற திரைப்படம் அன்றைய தினம் திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய சமாதானம் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டத்தை இலங்கையில் மிகவும் பிரயோசனமான முறையில் மக்கள் மயமாக்கவும் அதற்காக இலங்கையில் அனைத்து இனங்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதை இலக்குவைத்து தென்னாபிரிக்க சமாதானம் மற்றும் நல்லிணக்க வேலைத் திட்டம் மற்றும் அதன் மூலமான நன்மையை இலங்கையில் அனைத்து இனங்களுக்கிடையில் பகிர்ந்துகொள்வதை தொனிப்பொருளாக கொண்டுள்ள தேசிய ஒன்றிணைந்த மற்றும் நல்லிணக்க வேலைத் திட்டம் எனும் தொனிப்பொருளில், நாட்டில் அனைத்து மாவட்ட செயலாளர் காரியாலயங்கள் மற்றும் பிரதான செயலாளர் காரியாலயங்களில் மாதத்துக்கு ஒருமுறை உலக தரம்கொண்ட நல்லிணக்கதை தானிப்பொருளாக்கொண்ட திரைப்படம் ஒன்றை திரையிட்டு அது தொடர்பில் பல் கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புத்திஜீவிகளின் பங்கு பற்றுலுடன் விசேட தெளிவு படுத்தல் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

திரைப்படம் ஒவ்வொரு மாதத்திலும் 3ஆவது வாரத்தில் வியாழக்கிழமை தினங்களில் காலை 9,30 திரையிட ஆரம்பிப்பதுடன் அதற்கு நிகராக இடம்பெறும் புத்திஜீவிகளின் கலந்துரையாடல் நிகழ் நிலையினூடாக நடைபெறும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.06.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியலில் தந்திரங்களை அறிவதே ஆற்றலாகும்?

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் மாகாண சபையிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை திரும்பப் பெறுவது தொடர்பில் பேசிவருகின்றார். விக்னேஸ்வரன் கூறுவது போன்று அதனைத் திரும்பப் பெறுவது அவசியமாகும். ஆனால், அதற்கு இந்தியாவின் பக்கத்திலிருந்து அழுத்தங்கள் வராவிட்டால் அது ஒருபோதும் நடவாது. ஏனெனில், அதனை வலியுறுத்துவதற்கு இந்தியாவுக்கு மட்டுமே உரித்து உண்டு - கூடவே, அதிகாரமும் உண்டு - ஏனெனில், அது இரண்டு நாடுகளுக்கு இடையிலான உடன்பாடாகும். இன்றுவரையில், இலங்கையின் ஆட்சியாளர்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றிலுமாக அகற்றாமல் இருப்பதற்கான காரணம் அது மட்டும்தான். இந்தியா இதனை கண்டுகொள்ளாமல் விட்டால் உடனடியாகவே இதனை அரசமைப்பிலிருந்து எடுத்துவிடுவார்கள்.

ஏனெனில், 13ஐ இல்லாமல் ஆக்க வேண்டுமென்று தென்னிலங்கையில் சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகள் தொடர்ந்து போர்க்கொடி உயர்த்தி வருகின்றன. இவ்வாறானதொரு சூழலில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெற முடியுமாக இருந்தால் அது தமிழர் அரசியலில் ஒரு பாய்ச்சலாகவே இருக்கும். இதற்கப்பால் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுவதும் – குறிப்பாக, ஒற்றையாட்சி அரசமைப்பை நீக்குவது பற்றி பேசுவதும் விருப்பமான விடயங்கள்தான். அவை நிகழவேண்டும் என்பதுதான் நமது கொள்கை நிலைப்பாடாகும். ஆனால், அவைகள் உடனடியாக நடந்துவிடக்கூடிய விடயங்கள் அல்ல என்பது அனைவரும் அறிந்ததே. இந்த விடயத்தை வலியுறுத்துவதால் 13ஐ இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்துவதாக அர்த்தமல்ல. 13இற்கு அப்பால் சென்று சமஷ்டி அடிப்படையிலான அரசியல் அதிகார கட்டமைப்பை பெற வேண்டும் என்பதுதான் ஈழநாட்டின் நிலைப்பாடாகும் - ஆனால், அவற்றை படிமுறை சார்ந்துதான் அடைய முயற்சிக்கலாம்.

ஆனால், இந்த இடத்தில் தென்னிலங்கையின் தந்திரக் கணக்குகள் தொடர்பிலும் தமிழ்த் தேசிய தரப்புகள் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டும். இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி அதிலிருந்து பயணிக்குமாறு வலியுறுத்தி வருகின்ற நிலையில் சிங்கள ஆளும் வர்க்கத்தை பொறுத்தவரையில் இது ஒரு நெருக்கடியாகும். மேற்குலகின் மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்களை விடவும் இதுதான் அவர்களை பொறுத்தவரையில் சிக்கலானது. ஏனெனில், இந்தியா ஓர் உடனடி அயல்நாடு - பிராந்திய சக்தி. ஏனைய நாடுகளை கையாள்வது போன்று இந்தியாவை கையாளவும் முடியாது.

இந்த இடத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் பக்கத்திலிருந்து மாகாண சபையின் தோல்வியை அறிவிக்கும்போது அதனை அவர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தத் தந்திரத்துக்குள் தமிழர் சிக்குப்பட்டுவிடக்கூடாது. தமிழ் மக்களின் அரசியல் இலக்கு சமஷ்டிதான். அதில், மாற்று கருத்தில்லை. ஆனால், அதற்காக இருக்கின்ற மாகாண சபையை தேவையில்லையென்று தமிழர் பக்கத்திலிருந்து கூற வேண்டிய தேவையில்லை. இதனைத்தான் நாம் வலியுறுத்தி வருகின்றோம் ஆனால், இதனை சில அரசியல் குழுக்கள் தவறாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடும்.

ஏனெனில், எங்களுக்கு எதிரான தென்னிலங்கை ஆட்சியாளர்களின் தந்திரப் பசிக்கு நாங்களே கருவியாகவும் – தீனியாகவும் ஆகிவிடக்கூடாது. இந்த இடத்தில்தான், சிங்களத்தின் தந்திரங்களை சரிவரப் புரிந்துகொண்டு அதற்கேற்ப அரசியலை முன்னெடுக்கும் உபாயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய தரப்புகள் சிந்திக்க முன்வர வேண்டும். எதிரியின் தந்திரங்களை அறிந்து, அதற்கேற்ப செயல்படுவதுதான், அரசியல் ஆற்றலாகும். தொடர்ந்தும் எதிரிகளின் தந்திரத்துக்குள் சிக்குண்டு, சீரழிவதற்கு பெயர் இராஜ தந்திரமல்ல.

# தோழர் சுபத்திரன் றொபேர்ட் மறைந்து 20 ஆண்டுகள்!

ஸ்ரீதரன் சுகு
(தலைவர் - தமிழர் சமூக ஜனநாயக கட்சி)



விடுதலை - சமத்துவ சமுதாய கனவுகள் நீர்த்துப்போய்விட்ட இந் நாட்களில் தோழர்கள் போராளிகளை மனதிடை நிறுத்துவோம்!

அர்ப்பணங்கள் தியாகங்களின் பெறுமதி கனதியை உணர முயல்வோம் !!

எமது சமூகத்தின் வாழ்வைச் சீராக்குவதற்காக - ஒடுக்குமுறைகள், சமூக அநீதிகள், பாரபட்சங்களுக்கு எதிராக பலரும் போராடி இருக்கிறார்கள். தன்னலமற்ற பெருந்திரளானவர்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

மக்களின் வாழ்வை செம்மையாக்குவதற்கு இன்று வாழ்பவர்கள் பங்களிக்கமுடியும். பங்களிக்கவேண்டும். ஆனால், அவநம்பிக்கைகள் அதிகரித்துள்ளன.

மிகவும் நெருக்கடியான ஒரு வரலாற்று காலகட்டத்தில் தோழர் சுபத்திரன் - றஞ்சன் - றொபேர்ட்டின் பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

தேசிய விடுதலை உடன் சகலவிதமான சமூகத் தளைகளிலிருந்தும் விடுதலை அவரது இலட்சியம். அறிவு, நியாயத்தின் வெளிச்சத்தில் விடயங்களை அவர் நோக்கினார். தேசிய ஒடுக்கமுறைக்கெதிரான போராட்டத்திற்கப்பால் சமூக சமத்துவத்திற்கான அக்கறைகள் அவரிடமிருந்தன.

உள்ளூரில் சமூகத் தளைகளை அறுத்தெறியும் ஆளுமை கொண்டவராக வாழந்தார். ஊர் மக்களின் நேசத்திற்குரியவராகவும் காணப்பட்டார்.

தான் வாழும் சமூகம் பற்றிய கூர்மையான அவதானிப்பு அக்கறை, சோசலிச சமூகத்தின் சாத்தியத்திற்கான வழிகள் பற்றிய தேடல் அவரிடமிருந்தது.

1990 களின் மத்தியில் சோசலிச முகாமில் ஏற்பட்ட தகர்வு பல கேள்விகளையும் வாதப் பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியிருந்தது. றொபேட் இதில் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்.

இன்று "வரலாறு பின்னோக்கி இயங்குவதில்லை" என்ற விதி நிரூபிக்கப்பட்டு வருகிறது.

தென் அமெரிக்கா தொடக்கம் தென்னாபிரிக்காவரை யூரேசியா, மத்திய கிழக்கு அடங்கலாக பல நாடுகளிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இதனைத்தான் நிரூபிக்கின்றன.

றொபேர்ட் கனவில் மிதப்பவரல்லர். நிஜத்திலே காலூன்றி நின்ற ஒரு யதார்த்தவாதி. ஈழமாணவர் பொதுமன்றத்தினூடாக தனது அரசியல் பயணத்தை தொடங்கிய றொபேர்ட் உடனடி நேரடிச் செயல்பாட்டாளராக விளங்கினார்.

தான் மக்களுக்கு உரைத்த விடயங்களில் தான் முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என்று கருதியவர். ஜனநாயக அரசியல் சூழல் ஒன்றை ஸ்தாபிப்பதில் அர்ப்பண உணர்வுடன் செயல்பட்டார்.

அவலங்களுக்குள்ளான மக்களுக்கு உதவுதல், தோழர்களுக்கு தலைமைதாங்கி வழிநடத்துதல் தனித்துவமாக மிளிர்ந்தார்.

இயக்கம், தோழர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கான பொருளாதார முயற்சிகளையும் பல அபாயங்கள் மத்தியில் முன்னெடுத்தார்.

மிகவும் கடினமான காலத்தில் ஒரு உறுப்பினராக இருந்துகொண்டு யாழ்ப்பாண மாநகர சபை செம்மையாக செயல்படுவதற்கும் மக்களுக்கு இயன்றவரை காரியங்கள் ஆற்றப்படுவதற்கும் அவர் உதவினார்.

யாழ். நூலகம் மீண்டும் திறக்கப்பட்டபோது அதனை திறக்கக்கூடாது என பலரும் ஆர்ப்பாட்டம் பண்ணி அது ஞாபகச்சின்னமாக இருக்கவேண்டும் என்று அராஜகம் நிகழ்ந்தபோதும் அதனை புதுமெருகுடன் திறந்து வைப்பதில் அன்றைய மாநகர முதல்வர் செல்லன் கந்தையர் - தமிழர் விடுலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டவர்.

அதிகாரப்பகிர்வு கட்டமைப்பொன்று ஏற்படவேண்டும், ஜனநாயக அரசியல் பேணப்படவேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விடிவு வேண்டும், இன சமூகங்களிடையே நல்லுறவு வேண்டும் என்று நடைமுறையில் செயல்பட்டவர்.

மாற்று கருத்துடையவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

இராணுவ முகாம்களிலும் சிறையிலும் சக தமிழ் கைதிகளால் பெரிதும் மதிக்கப்பட்டார். இயக்கத்துக்கு அப்பால் அவருக்கு தோழர்கள் நண்பர்கள் அதிகமாக இருந்தார்கள். நகைச்சுவையுடன் கலந்த இனிமையான நட்புணர்வு அவரிடமிருந்தது.


யாழ்ப்பாணக் காரியாலயத்தில் அவரை சந்திப்பதற்கு பாரபட்சம் இல்லாமல் அனைவருமே அவருடன் உறவு பாராட்டினார்கள். சாமான்யர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என பலரும் அவரது நண்பர்களாக இருந்தார்கள்.

எமது மக்களுக்கு எழிலார்ந்த வாழ்க்கையை கனவு கண்ட தோழர் றொபேர்ட் தமது 45ஆவது வயதில் படுகொலைசெய்யப்பட்டார். றொபேர்ட் அவரைப்போன்ற பலரின் படு கொலை ஈழப்போராட்டத்தின் வங்கு ரோத்தை அம்பலப்படுத்தியிருக்கிறது.

இத்தகைய மனிதர்களின் உழைப்பு சமூகத் தேவை என்பன இங்கு நிராசையாக்கப்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜுன் - 14 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 31**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : துவாதசி**




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மிதுனம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்று சாதிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான காரியங்களை கையில் எடுக்கவேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நன்மைகள் நடக்கும்.

**கும்பம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி வியப்பார். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

*ஜெயலலிதா குறித்து விமர்சனம்:*

# பா. ஜ. க. கூட்டணி தொடர்பாக மறுபரிசீலனை செய்ய நேரிடும்



சென்னை, ஜுன் 14

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா குறித்து பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ள நிலையில், அந்தக் கட்சியுடனான கூட்டணி குறித்து மறுபரிசீலனை செய்ய நேரிடும் என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறை சென்றவர் ஜெயலலிதா என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அரசியல் அனுபவம் இல்லாத பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலைக்கு வரலாறும் பாரம்பரியமும் தெரியாது. மாநில தலைவர் பதவிக்கே தகுதியில்லாதவர் அவர். கடந்த 3 ஆண்டுகளாக நாவடக்கம், தோழமை உணர்வு இல்லாமலும் கூட்டணி தர்மத்தைக் கடைபிடிக்காமலும் பேசி வருகிறார். மறைந்த தலைவர் ஜெயலலிதா குறித்து அவர் விமர்சனம் செய்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதனால், அ. தி. மு. கவின் 2 கோடி தொண்டர்களும் கொதித்து போயுள்ளனர்.

அ. தி. மு. கவுக்கு நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. ஆனால், அண்ணாமலையின் செயல்பாடுகள், பா. ஜ. க. -அ. தி. மு. க. கூட்டணி தொடரக்கூடாது என்பதாகவே உள்ளது. மேலும், நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வரக் கூடாது என்ற நிலையில்தான் அண்ணாமலையின் பயணம் உள்ளது.

தமிழகத்தில் எங்கள் தலைமையிலான கூட்டணியில் இருக்கும்போதுதான், பா. ஜ. கவுக்கு அடையாளம் கிடைத்தது. இந்த அடிப்படை விடயத்தை மறந்து, கூட்டணியை முறிக்கும் செயலாக அண்ணாமலையின் செயல்பாடுகள் உள்ளன.

அதிமுகவை விமர்சனம் செய்யும் அண்ணாமலையின் போக்கு தொடர்ந்தால், கூட்டணி குறித்து மறுபரிசீலனை செய்ய நேரிடும் - என்றார். (ஐ)

# தமிழகம், புதுச்சேரி 40 தொகுதியிலும் பா. ஜ. க. கூட்டணியே வெற்றிபெறும்!

## அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, ஜுன் 14

பாராளுமன்ற தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் சகல தொகுதிகளிலும் - 40 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி வெற்றி பெறும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்த 2 ஆண்டுகளில் தி. மு. க. ஆட்சி ஊழலுக்கு பெயர் வாங்கியுள்ளது. அதனால்தான் பால்வளத்துறை அமைச்சர் மாற்றப்பட்டுள்ளார். 30 ஆயிரம்



கோடிக்கு சொத்து சேர்த்ததாக சொன்னதால்தானே நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மாற்றப்பட்டார். ஊழலுக்கு பெயர்போனது தி. மு. க. பா. ஜ. கவின் 9 ஆண்டுகால சாதனை மக்களுக்கு தெரியும்.

2004 முதல் 2009 வரை இந்தியாவின் மிகப்பெரிய ஊழல் அமைச்சர்கள் யார் என்றால் தி. மு. க. அமைச்சர்கள்தான். 2004 முதல் 2014 வரை ஒரு மோசமான ஊழல் வரலாறு, தி. மு. க. அமைச்சர்களால் எழுதப்பட்டுள்ளது - என்றும் அவர் சொன்னார்.

(ஐ)

# ஜெயலலிதா பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கில் அவதூறு

## அண்ணாமலைக்கு அ. தி. மு. க. கண்டனம்

சென்னை, ஜுன் 14

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில், பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும், முதிர்ச்சியுமற்ற பா. ஜ. கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை திட்டமிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு பரப்பியதற்கு கண்டனம் தெரிவிப்பதாக அ. தி. மு. க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அந்தத் தீர்மானத்தில், அ. தி. மு. கவின் காவல் தெய்வமும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, ஒன்றரை கோடி தொண்டர்களுடைய மனதிலும், பொதுமக்கள் மனதிலும் நீங்கா இடம்பிடித்து, வாழும் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு ஓர் ஆங்கில பத்திரிகைக்கு, பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் பொதுவெளியில் ஏற்றுக்கொள்ள முடியாத, திட்டமிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு கருத்தை பேட்டியாகக் கொடுத்துள்ளார். இதன் காரணமாக, ஜெயலலிதாவின் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் மனதில் மிகுந்த வேதனையையும், மன உளைச்சலையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி மற்றும் தேசிய அளவிலான பல்வேறு கட்சிகளின் மூத்த தலைவர்கள், பிற மாநில முதல்வர்கள் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் ஜெயலலிதா மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார்கள். தேசிய தலைவருக்கு நிகரான ஜெயலலிதாவை, பல தலைவர்கள் அவரது இல்லத்திலேயே நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் முதல்வராக ஜெயலலிதா 16 ஆண்டுகள் பதவியில் இருந்து, பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். அவரின் திட்டங்களை மற்ற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் சிறப்புமிகு நல்லாட்சியை வழங்கியவர். தேசிய அளவில் பல்வேறு திட்டங்களுக்கு முன்னுதாரணமாக வழிகாட்டிய மகத்தான தலைவர் ஆவார். தமிழ்நாட்டின் வரலாற்றில் ஆண்ட கட்சியை மீண்டும் ஆட்சியில் அமரவைத்து சாதனை படைத்தவர் ஜெயலலிதா.

இத்தகைய போற்றுதலுக்குரிய ஜெயலலிதாவை, பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும், முதிர்ச்சியும் அற்ற பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை திட்டமிட்டு, உள்நோக்கத்துடன் பொறுப்பற்ற முறையில் பேட்டி அளித்தமைக்கு கண்டனம் தெரிவிக்கின்றோம். (ஐ)

# வீதி விபத்துக்களினால் 4 மாதங்களில் 709 பலி!

கொழும்பு, ஜூன் 14

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வீதி விபத்துக்களால் 709 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இவற்றில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவாக பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான நிலவரப்படி, மொத்தமாக 8,202 விபத்துக்கள் நடந்துள்ளன.

குறிப்பாக 667 பேர் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்தனர்.

அத்துடன் மொத்தமாக 709 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2,160 பாரிய விபத்துகள் நிகழ்ந்துள்ளன.

அத்துடன் 3,201 சிறு விபத்துகள் நடந்துள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், மோட்டார் சைக்கிள் ஓட்டிகளே அதிகளவில் அடங்கியுள்ளனர்.

உயிரிழந்த 709 பேரில் 220 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் என்பதுடன் 102 பேர் பயணிகள் ஆவர்.

அத்துடன் 179 பாதசாரிகளும் மரணித்துள்ளனர். இந்த உயிரிழப்புகளில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள்களால் ஏற்படுகின்றன.

இரண்டாவது அதிக விபத்துக்கள்ஓட்டோக்களால் ஏற்படுகின்றன.

இதனால் வீதியில் நிகழும் விபத்துக்களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களால் இடம்பெற்றுள்ளவை என தெரியவந்துள்ளது.

எனவே, மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மற்றும் ஓட்டோ சாரதிகள் வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது போக்குவரத்து விதிகளை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்-என்றார். (அ)

# தேர்தலை பிற்போடுவதற்கு ஒருபோதும் இடமளியோம்!

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முற்பட்டால், அந்த முயற்சியைத் தோற்கடிப்பதற்கு எதிரணிகள் கூட்டாகக் களமிறங்கும் என்று எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:- மக்கள் அனுமதி ஆணையின்றி முன்னெடுக்கப்படும் ஆட்சியானது ஏதேச்சதிகார ஆட்சியாகவே அமையும். ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமெனில் உரிய காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நுவரெலியாவில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஆற்றிய உரையானது, தேர்தல் தொடர்பான அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது. அவ்வாறான முயற்சியில் ஜனாதிபதி இறங்கினால் எதிரணிகளை இணைத்துக்கொண்டு அந்த முயற்சியைத் தோற்கடிப்போம்-என்றார்.(அ)

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை!

## நோயாளர்கள் பெரும் அவதி

முல்லைத்தீவு, ஜூன் 14

**முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவி வருவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒவ்வொரு துறைக்குமான சிறப்பு வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களை அவ்வப்போது நியமிப்பது, அதன் பின்னர் அவர்களை மாற்றம் செய்வது போன்ற நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ சேவையை மக்கள் முழுமையாக-இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது போன்ற இடமாற்ற நடவடிக்கைகளை நிறுத்தி சரியான முறையில் சேவையை வழங்கக் கூடிய நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இயங்கவேண்டும் என அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்!

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்று கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

குறித்த தினத்துக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது. அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதத்தின் பின்பே ஜனாதிபதித் தேர்தல். ஆனால், அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இப்போதே அடிப்படை வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

அதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்தவேண்டும். ஆனால், அரசு தேர்தலை நடத்துவதற்குப் பணமில்லை என்று கூறி உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலவரையறை இன்றி ஒத்திப்போட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு இல்லை. எப்படியும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்பது தெளிவாகின்றது என்றுள்ளது. (அ)

# நிதி நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் கடத்தலில் தொடர்புடைய பிக்கு கைது!

கொழும்பு, ஜூன் 14

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என தம்மை அடையாளப்படுத்தியவர்களால் நிதி நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவரை தெமட்டகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மே 11 ஆம் திகதி தெற்கு மாகொல பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனமொன்றுக்குச் சென்ற குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனக் கூறப்படும் இருவருடன், குறித்த பிக்குவும், அந்த நிறுவன உரிமையாளரைக் கடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அவரை கடத்திச் சென்று அவரது கடவுச்சீட்டு மற்றும் வீட்டுப் பத்திரத்தை வலுக்கட்டாயமாக சந்தேகநபர்கள் எடுத்துச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளாக தம்மை அடையாளப்படுத்திய பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரையும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஒருவரையும், கைது செய்யவுள்ளதாக தெமட்டகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த கடத்தல் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமையகத்துக்கு சொந்தமான கப் வாகனமொன்றையும் கைப்பற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# காரைநகர் வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் கையளிப்பு




யாழ்ப்பாணம், ஜூன் 14

காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

ஒருத்தி திரைப்பட தயாரிப்பாளர் கனடா காரை கலாசார மன்றத்துக்கு ஒருத்தி திரைப்படத்தை இலவசமாக திரையிட வழங்கியதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கனடா காரை கலாசார மன்றம் மருந்துப் பொருட்களை இலவசமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

நேற்று காலை இடம் பெற்ற மருந்துப்பொருட்கள் கையளிக்கும் வைபவத்தில் ஒருத்தி திரைப்பட தயாரிப்பாளர் சுதாகரனும் கலந்து கொண்டார். (அ)

# பழமை வாய்ந்த பாண் கட்டளை சட்டத்தை ரத்து செய்ய அனுமதி

கொழும்பு, ஜூன் 14

சுமார் 159 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாண் கட்டளைச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1864 ஆம் ஆண்டில் 13 இலக்க பாண் கட்டளைச் சட்டமானது, பாண் விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விற்பனைக்கு வழங்கப்படும் பாணில் கலப்படம் செய்யப்படுவதை தடுக்கிறது.

இந்த சட்டத்தை நீக்குவது தொடர்பில் நேற்று முன் தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

பாண் கட்டளைச் சட்டம் நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2003ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சட்டத்தின் சில விதிமுறைகளுடன் ஒத்துப்போவதில்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சரவை பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பாண் கட்டளைச் சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்துவது அவசியமற்றது என அரசாங்கம் அவதானித்துள்ளது.

இந்த நிலையில், பாண் கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூல வரைவை தயாரிக்குமாறு சட்டவரைஞர்களுக்கு அறிவுறுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியது. (அ)

# இலங்கை ரயில் சேவை தனியார் மயமாகாது!

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 14**

**இலங்கை ரயில் சேவை தனியார் மயமாக்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

எவ்வாறாயினும் ரயில் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டத்தை சந்தித்து வருவதாகவும் எனவே பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு என ஏற்படும் பாரிய செலவீனங்கள், திறமையின்மை மற்றும் சுயாதீனமாக தீர்மானம் எடுக்க இயலாமை என்பன திணைக்களத்தின் வீழ்ச்சிக்கு பங்களித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை துறைமுக அதிகார சபையில் ஏற்பட்ட மாற்றத்தைப் போன்று ரயில் திணைக்களமும் மறுசீரமைக்கப்பட்டு அதிகார சபையாக மாற்றப்படவேண்டும் என்றும் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

அவ்வாறு மாற்றம் செய்யபடாவிடின் ரயில்வே துறை தனியார் மயமாக்குவதை தவிர அரசாங்கத்துக்கு வேறு வழி கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.



ரயில் திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றுவதன் மூலம் அதிகாரிகள் சுயாதீனமான தீர்மானங்களை எடுப்பதுடன் பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியும் என்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல கூறினார். (அ)

# இந்த ஆண்டின் இறுதிக்குள் பொருளாதாரம் வலுவடையும்

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 14

இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டின் பொருளாதாரம் வலுவடையுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தெஹியோவிட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சர்வதேச நாணய நிதியம் பல்வேறு கணிப்புகளை முன்வைத்த போதிலும், அத்தகைய கணிப்புகளுக்கு அப்பால் நாட்டின் பொருளாதாரத்தை கடந்த வருடமும் நிர்வகிக்க முடிந்தது.

உலக வங்கியின் கணிப்பீட்டின் அடிப்படையில், இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறை 4.2 வீதமென அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறை 3.0 ஆக இருக்குமென சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

எவ்வாறாயினும், மத்திய வங்கியின் கணிப்பீட்டின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறை 2 - 3 இற்கும் இடையில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிக்க அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால், வருடத்தின் இறுதிக் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் சாதகமானதாக இருக்கும்-என்றார். (அ)

# கடவுச்சீட்டு பெற நாளை முதல் இணையம் மூலம் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன்

கடவுச்சீட்டுக்களை இணையத்தளம் வழியாக வழங்கும் முறைமை நாளை முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நாளை இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், எவருக்காவது அவசியமாக இருந்தால், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு வந்தும் விண்ணப்பத்தை சமர்ப்பித்து கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு நாளில் கடவுச்சீட்டை வழங்கும் சேவை வழமைப் போல் நடைபெறும் என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ச இலுக்ப்பிட்டிய தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த பின்னர், மூன்று தினங்களுக்குள் விண்ணப்பதாரியின் வீட்டுக்கு கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# மாத்தறையில் சூடு; ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 14

மாத்தறை, தெமட்டபிட்டிய, திக்வெல்லவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் வந்த சிலர் ரி 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நேற்று காலை 7.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் சிகிச்சைக்காக மாத்தறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, தெஹிவளையில் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் 55 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக கடந்த 10ஆம் திகதி ஏற்பட்ட இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர் தெஹிவளை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திரைப்படக் கல்லூரியை ஆரம்பிக்க அரசு தீர்மானம்



கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் திரைப்பட தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு மற்றும் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் திரைப்படக்கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை ராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் நடத்தி வரும் திரைப்பட துறை சம்பந்தமான டிப்ளோமா பாடநெறிக்கு மேலதிகமாக திரைப்பட இயக்கம், படத்தொகுப்பு, நடிப்பு, திரைக்கதை எழுதுதல் ஆகியவற்றில் விரிவான அறிவை பெற்றுக் கொள்ளும் வகையில் திரைப்படக்கல்லூரி ஆரம்பிக்கப்படும்.

மேலும் தேசிய திரைப்பட ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவை ஏற்படுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன் ஊடாக திரைப்பட தொழிற்துறையில் காணப்படும் திரைப்பட விநியோக ஏகபோக உரிமையை இல்லாதொழிக்க முடியும்.

இது சம்பந்தமான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துமாறு திரைப்படத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

ஏற்படுத்தப்பட உள்ள உத்தேச திரைப்பட ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊடாக தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தை மறுசீரமைத்து, திரைப்படத்துறையினருக்கு கூடுதல் சந்தர்ப்பங்களை பெற வாய்ப்புகள் கிடைக்கும்-என்றார். (அ)

# ரணிலின் வீட்டை எரித்தோர் போராட்டக்காரர்கள் அல்லர்

## கூறுகிறார் அகில விராஜ் காரியவசம்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது 70 வயது கடந்து விட்டது. அவர் 50, 55 வயதில் இருக்கும்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை வழங்கியிருந்தால், அவரது அனுபவங்களின் மூலம் நாட்டுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொண்டிருக்கமுடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணிலின் வீட்டைத் தீயிட்டனர். அதனைப் போராட்டக்கார்கள் செய்யவில்லை. அது வேறு ஒரு சூழ்ச்சி எனவும் அவர் குறிப்பிட்டார்.

குருநாகல் யாபஹூவ தொகுதியின் அதிகார சபையை ஏற்படுத்துவதற்காக பொல்பித்திகம பிரதேசத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2000 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பிரதமராக பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதார எதிர்மறையான மட்டத்தில் இருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை நேர்மறையான மட்டத்துக்கு கொண்டு வந்து நாட்டை சிறந்த இடத்தை நோக்கி உயர்த்தி வைத்தி பின்னர், ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் கூட்டணியை அமைத்து, அதனை பறித்துக் கொண்டன.

2017 ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. பொது வேட்பாளர் வெற்றி பெற்று நாங்கள் ஆட்சியமைத்தோம். அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

கல்வியல் கல்லூரிகளுக்கு இரண்டு மடங்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அரச பணியிடங்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பபட்டன.

பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வந்ததன் காரணமாக இவை அனைத்தையும் செய்ய முடிந்தது.

ரணில் விக்கிரமசிங்க நாளைய தினம் பற்றி சிந்திக்கும், எதிர் கால பார்வையை கொண்ட தலைவர்.

இப்படியான தலைவர் இல்லாத காரணத்தினால், அனைத்து கட்சிகளையும் சேர்ந்தவர்கள் காலிமுகத்திடலில் ஒன்றிணைந்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பாராளுமன்றத்தில் இருக்கும் 225 பேரை பேர வாவியில் தள்ள வேண்டும் எனப் போராட்டக் காரர்கள் கூறினர். இவற்றுக்கு இடையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்றார்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்து வெளியேறினர். அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதும் எஞ்சியிருந்தவர்களும் அங்கிருந்து வெளியேறினர்.

போராட்டம் ரணில் விக்ரமசிங்கவின் சூழ்ச்சியா எனவும் அப்போது சிலர் கேட்டனர். இதற்கிடையில், ஜனாதிபதியின் வீட்டையும் தீயிட்டனர். அதனைப் போராட்டகார்கள் செய்யவில்லை. அது வேறு ஒரு சூழ்ச்சி.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற போது, இரவில் மின்சாரம் துண்டிக்கப்படும் நிலைமை காணப்பட்டது. எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை என முழு நாடும் நெருக்கடியில் இருந்தது.

எவரும் பொறுப்பேற்காத நிலைமையிலேயே அவர் நாட்டை பொறுப்பேற்றார். அதற்கு அரசியல் முதிர்ச்சி இருக்கவேண்டும். அறிவு இருக்க வேண்டும்.

நாட்டில் அன்று காணப்பட்ட பிரச்னைகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன-என்றார்.

# தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஊடகங்களை நசுக்க அனுமதியோம்!

## கூறுகிறார் அனுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, ஜூன் 14

**ஊடகங்களை நசுக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதிக்கப்படமாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டு மக்களின் தகவல்களை அறியும் உரிமையை அழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.



அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தகவல்களை ஊடகங்கள் மூலம் பரப்புவது அந்த நிறுவனங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும்.

அந்த ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நாட்டில் தேர்தல்களை பிற்போடுவதன் மூலம் ஊடகங்களை அடக்கி ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகும் நோக்கில் ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார்-என்றார். (அ)

# தேர்தல் தொடர்பில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 14

தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனை கூறினார்.

பாராளுமன்ற தேர்தல் சட்டம், உள்ளூராட்சி மன்ற வாக்களிப்பு கட்டளைச் சட்டம், ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்கு கடந்த வருடம்



டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

எவ்வாறாயினும், சட்டங்களை தனித்தனியாக திருத்துவதற்கு பதிலாக, புதிய தேர்தல் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி அதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார். (அ)

# மதுபோதையில் குழப்பம் விளைவித்த பிக்கு கைது

கொழும்பு, ஜூன் 14

மது அருந்தி போதை ஏறிய நிலையில், குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்ட பௌத்த பிக்கு ஒருவர் ஊறாபொல பிரதேசத்தில் நடந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் பௌத்த பிக்குகளுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை இருக்கவில்லை என அத்தனகல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்ட பௌத்த பிக்கு, இசை நிகழ்ச்சியை காணச் சென்றிருந்த சிலருடன் தகராறை ஏற்படுத்தினார்.

இதன்போது பொலிஸார் தலையிட்டு பௌத்த பிக்குவை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது அந்த பிக்கு பொலிஸார் சிலரையும் தாக்கியுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் பதற்றமாக நடந்துகொண்ட சந்தேக நபர், அங்கிருந்த கண்ணாடி ஒன்றைத் தாக்கி உடைத்துள்ளார்.

இதனால், அவரது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டதுடன் அவரை வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# சோபித தேரரின் கீழ் இயங்கும் 2 விகாரைகளில் மின் துண்டிப்பு

கொழும்பு, ஜூன் 14

ஓமல்பே சோபித்த தேரர் தலைமையில் இயங்கும் இரண்டு விகாரைகளில் கட்டணம் செலுத்தாமை காரணமாக மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் உள்ள சிறிபோபுர சிறி தர்மசிங்கவிலுள்ள மற்றும் உதுவான்கந்தவிலுள்ள சிறி தர்மதூத யோகஸ்ரமம் விகாரைகளில் மேற்படி மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சிறி தர்மதூத யோகஸ்ரமம் விகாரையின் மின் கட்டணம் 94, 000 ரூபாய் எனவும் சிறிபோபுர சிறி தர்மசிங்கராம விகாரையின் மின் கட்டணம் 22,872 ரூபாய் எனவும் குறித்த தொகை செலுத்த படாததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதிய வருமானம் இன்மையால் மின் கட்டணம் செலுத்த முடியாமல் சிரமப்படுவதாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் 120 நாட்களில் மட்டும் 3000 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கொழும்பு, ஜூன் 14

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மூவாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் எண்ணாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சிறுவர்களின் செயற்பாடுகள், கல்வி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டார். (அ)

# பழுதடைந்த மருத்துவ இயந்திரங்களை திருத்துவதற்கு 4 பில்லியன் ரூபாய் நிதி

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 14

தற்போது பல வைத்தியசாலைகளில் செயலிழந்துள்ள ஸ்கானர் இயந்திரங்கள் உட்பட அத்தியாவசிய இயந்திரங்களை திருத்துவதற்கு 4 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

5 மாதங்களாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் எம்.ஆர்.ஐ. ஸ்கானர் செயலிழந்துள்ளதால் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அரச வைத்தியசாலைகளில் தற்போது 13 எம்.ஆர்.ஐ ஸ்கான் இயந்திரங்கள் உள்ளன. அதில் பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் உள்ள இயந்திரம் ஒன்று 2 வருடங்களுக்கு முன்னர் செயலிழந்துள்ளது.

இதன் காரணமாக தற்போது 11 எம்.ஆர்.ஐ. ஸ்கான் இயந்திரங்களே இயங்கி வருவதாக அரசாங்க கதிரியக்க நிபுணர்கள் தொழிநுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல,

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படும்.

அத்தோடு பல வைத்தியசாலைகளில் செயலிழந்துள்ள ஸ்கானர் இயந்திரங்கள் உட்பட அத்தியாவசிய இயந்திரங்களை திருத்துவதற்கு 4 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

# தனியார் பஸ்களின் பின்னணியில் அரசியல் செல்வாக்கு அதிகரிப்பு!

## போக்குவரத்து அமைச்சர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 14

அரசியல்வாதிகள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்க அதிகாரிகள் போன்ற செல்வாக்கு மிக்கவர்கள் பஸ் உரிமையாளர்கள் மத்தியில் இருப்பதால் தனியார் பஸ்களை ஒழுங்குபடுத்துவது சவாலாகவே உள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முறைகேடாக வாகனம் ஓட்டுதல், பயணிகளுக்கு டிக்கெட் வழங்காமை, அதிவேகமாக வாகனம் ஓட்டுதல், பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு தற்காலிக நிறுத்தங்கள், நேர அட்டவணையை கடைப்பிடிக்காதது ஆகியவை பயணிகள் போக்குவரத்துச் சேவையில் 50 சதவீத பங்குகளை வகிக்கும் தனியார் பஸ் சாரதிகள் மீதான முக்கிய குற்றச்சாட்டுகளாகும்-என்றார்.

பஸ் சேவையின் தரத்தை மேம்படுத்தும் அதேவேளையில், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பஸ் சேவையை ஒழுங்குபடுத்த தவறியமை குறித்த கேள்விக்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன,

நாடு முழுவதிலும் உள்ள தனியார் பஸ்களை ஒழுங்குபடுத்துவது எப்போதுமே சவாலானதாகவே இருந்தது.

குறிப்பிட்ட சில வீதிகளில் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பஸ் உரிமையாளர்களில் அரசியல்வாதிகள், உள்நாட்டு இறைவரி அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர்.

வழித்தட அனுமதி அல்லது உரிமம் இல்லாமல் பஸ்கள் இயக்கப்படுகின்றன. சிலர் தற்காலிக வழி அனுமதிப்பத்திரம் மூலம் தங்கள் பஸ்களை சாலைகளில் இயக்குகின்றனர். தற்போது தேர்வு செய்யப்பட்ட வழித்தடங்களில் பஸ்களை இயக்க குத்தகைக்கு கோரத் திட்டமிட்டுள்ளோம்.

தனியார் பஸ்கள் சாதாரண, அரை சொகுசு மற்றும் சொகுசு சேவை என மூன்று வகைகளில் இயங்கி வந்தன. இருப்பினும், அரசாங்கம் சமீபத்தில் அரைச் சொகுசு சேவையை இரத்து செய்தமையும் குறிப்பிடத்தக்கது-என்றார். (அ)

ஜானெட் ரோட்ரிக்ஸ் பல்லோரஸ்

# ஒருவரின் மூளையை மாற்றி புதிய மூளையை பொருத்த முடியுமா?

1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்காவின் பிரபல நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான ராபர்ட் ஜே. ஒயிட், கிளீவ்லேண்டில் உள்ள ஒரு மருத்துவமனையில் வழக்கத்திற்கு மாறான அறுவை சிகிச்சை ஒன்றை மேற்கொண்டார்.

குரங்கு ஒன்றின் தலையை எடுத்து மற்றொன்றின் உடலில் பொருத்துவதுதான் அது. சிக்கலான அந்த அறுவை சிகிச்சை, கிட்டத்தட்ட 18 மணி நேரம் நடைபெற்றது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, அந்த குரங்கு கண் விழித்தவுடன் அதனால் பார்க்கவும், நுகரவும், ஏன் கடிக்கவும் கூட முடிந்தது. குரங்கிற்கு மேற்கொள்ளப்பட்ட அந்த அரிய அறுவை சிகிச்சை அப்போது ஊடகங்களில் பரபரப்பு செய்தியானது.

இதுதான் முதல் முறை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மூளை மாற்று அறுவை சிகிச்சை அல்லது தலை மாற்று அறுவை சிகிச்சை என்று சொல்லலாம்.

இதை ஒயிட், 'உடல் மாற்று அறுவை சிகிச்சை' என்று அழைக்க விரும்பினார். மூளை அல்லது உடல் மாற்று அறுவை சிகிச்சையை ஒயிட் மட்டும் முயற்சிக்கவில்லை. அவரை போல நிறைய மருத்துவ நிபுணர்களும் இது போன்ற முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், உயிர்களைக் காக்க இன்றைக்கு பயன்படும் பல அறுவை சிகிச்சை முறைகளை உருவாக்கிய பெருமை டாக்டர் ஒயிட்டை சேரும்.



ஆனால் அவரது இதுபோன்ற முயற்சிகள் கடுமையாக விமர்சிக்கப்படவும் செய்தன. அதற்கெல்லாம் அஞ்சாமல் அவர் தன் வாழ்நாள் முழுவதும் புதிய மருத்துவ முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டார். நூற்றுக்கணக்கான பரிசோதனைகளை செய்தார். இருப்பினும் அவர் தலை மாற்று அறுவை சிகிச்சை செய்த குரங்கு சில நாட்களிலேயே இறந்துவிட்டதால் ஒயிட்டின் இந்த சாதனை குறுகிய காலம் வரை மட்டும் பேசப்பட்டது.

**மூளையை தண்டுவடத்துடன் இணைப்பதில் உள்ள சிக்கல்கள்**

மருத்துவ அறிவியல் நாளுக்கு நாள் முன்னேற்றங்களை கண்டு வந்தாலும், மூளையை மட்டும் மருத்துவர்களால் இன்னமும் மாற்றி அமைக்க முடியவில்லை.

ஒரு நபர் மூளை மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதாக வைத்து கொண்டால், அவருக்கு புதிதாக பொருத்தப்படும் மூளையை அவரின் முதுகு தண்டுவடத்துடன் இணைப்பது இயலாத காரியம் என்பது தான் இதில் உள்ள சிக்கல்.


இதனால் தான், "இந்த பிரபஞ்சத்திலேயே மிகவும் சிக்கலான உறுப்பாக மூளை கருதப்படுகிறது".

உடலின் ஒட்டுமொத்த இயக்கத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மூளை, தன்னுடன் பல மில்லியன் கணக்கான இணைப்புகளையும் கொண்டுள்ளது. உடலுறுப்புகள் உடனான மூளையின் தொடர்பை மாற்று அறுவை சிகிச்சையின் மூலம் மறுசீரமைப்பது என்பது இன்னும் நவீன மருத்துவ உலகின் வரம்பிற்குள் வராத விஷயமாகவே உள்ளது.

ஒரு வாதத்திற்காக மூளை மாற்று அறுவை சிகிச்சையை மருத்துவர்களால் செய்ய முடிவதாக வைத்து கொண்டால், அந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களின் நினைவுகள் மற்றும் உணர்வுகள் என்னவாகும்? என்பன போன்ற விடை காணப்படாத கேள்விகளும் உள்ளன.

மருத்துவர் ஒயிட், மூளை மாற்று (அல்லது தலைமாற்று)





அறுவை சிகிச்சைக்கு உட்படுத்திய குரங்குகளின் உடலிலும், சிகிச்சைக்கு பின் கழுத்துக்கு கீழே உறுப்புகளின் இயக்கம் முடங்கித் தான் போயின (Paralysed).

**உபரி நியூரான்கள்**

தற்போதைய சூழலில், வெற்றிகரமான மூளை மாற்று அறுவை சிகிச்சை சாத்தியமில்லை எனும்பொழுது, தன்னைத் தானே மறுவடிமைத்து கொள்ளும் மூளையின் வியக்கத்தக்க திறனை கவனத்தில் கொள்வது அவசியம் என்கின்றனர் நிபுணர்கள்.

நரம்பு செல்கள் என்றழைக்கப்படும் நியூரான்களுக்கு இடையேயான தொடர்பை மாற்றியமைப்பது, அவற்றை புதிதாக உருவாக்குவது மற்றும் நீக்குவது போன்ற செயல்பாடுகளின் மூலம் மூளை தன்னை மறுசீரமைத்து கொள்கிறது.

ஒரு கணித சமன்பாட்டிற்கு நாம் தீர்வு காண்பது, ஒயின் மது வகையின் பெயர் நம் நினைவில் நிற்பது, இனி நமக்கு தேவைப்படாதது என நாம் முடிவெடுக்கும் விஷயங்கள் நம் நினைவில் இருந்து அகன்றுபோவது என எல்லாமும் நியூரான்களின் செயல் தான்.

இவற்றை கொண்டு தன்னைத் தானே மறுசீரமைத்து கொள்ளும் மூளையின் வியக்கத்தக்க திறன் 'பிளாஸ்டிசிட்டி' என்று அழைக்கப்படுகிறது. சில நேரங்களில், மூளையில் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து அது மீளவும் இந்த பிளாஸ்டிசிட்டி தான் காரணமாக உள்ளது.



அதேநேரம் பிளாஸ்டிசிட்டிக்கு இன்னொரு புறமும் (மறுபக்கமும்) உள்ளது. பார்கின்சன் அல்லது அல்சைமர் நோய் ஒருவருக்கு இருப்பதை இதனால் மறைக்க முடியும். இதனால் பல ஆண்டுகள் அல்லது தசாப்தங்களாக ஒருவருக்கு இந்த நோய்கள் இருப்பது கவனிக்கப்படாமல் போவதற்கும் வாய்ப்பு உள்ளது.

**நியூரோஜெனிசிஸ் என்ற புதிய கண்டுபிடிப்பு**

நியூரான்கள் அவற்றின் இணைப்புகளை மாற்றிக் கொள்கின்றன. ஆனால், செயலிழக்கும் அல்லது இறக்கும் நியூரான் செல்கள் மீண்டும் உருவாகின்றனவா என்ற கேள்விக்கு, இழக்கப்படும் நரம்பு செல்களுக்கு பதிலாக மற்றொன்றை ஈடாக்க முடியாது என்பதே பெரும்பாலோரின் பதிலாக இருக்கிறது.

இருப்பினும், மனிதனின் மூளையில் உள்ள ஸ்டெம் செல்களின் மூலம் தினந்தோறும் புதிய நியூரான்கள் தோற்றுவிக்கப்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. 'நியூரோஜெனிசிஸ்' எனப்படும் இந்த செயல் நடைபெறுவதைக் கண்டுபிடித்தது நரம்பியல் மருத்துவத்தில் புதிய புரட்சியை ஏற்படுத்தி உள்ளது.

துரதிருஷ்டவசமாக, நன்கு வளர்ந்த மனிதனின் மூளையில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் இந்த நியூரோஜெனிசிஸ் எனும் திறன் தொடர்கிறது. இந்தப் பகுதிகளில் ஒன்று தான் மனிதனின் கற்றல் மற்றும் நினைவாற்றலுடன் தொடர்புடைய ஹிப்போகாம்பஸ்.

உடற்பயிற்சி மற்றும் ஆக்சிஜனேற்றம் அதிகம் உள்ள உணவுகள் புதிய நியூரான்களின் உற்பத்தியை தூண்டலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதேசமயம் உடல் பருமன், முதுமை அல்லது நரம்பியல் கடத்தல் நோய்கள், புதிய நியூரான்கள் உருவாவதை குறைக்கலாம்.

எனவே, புதிய நியூரான்களின் உருவாக்கத்தை தீவிரமாக செயல்படுத்துவதன் மூலம், மூளையை மீண்டும் உருவாக்குவது என்பது, இன்று மருத்துவ அறிவியலுக்கு முன்னுள்ள மிகப்பெரிய சவாலாக இருக்கிறது.

**மாற்று அறுவை சிகிச்சை**

இறக்கும் நியூரான்களை பிற செல்களை கொண்டு மாற்றி அமைக்கும் நுட்பமான சிகிச்சை முறையை நரம்பியல் மருத்துவ நிபுணர்கள் பல தசாப்தங்களாக செய்து வருகின்றனர்.

இந்த சிகிச்சை முறை, பல்வேறு நரம்பியல் நோய்களுக்கு சாத்தியமான தீர்வாக இருக்கலாம் என்று சோதனை அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

நரம்பியல் தொடர்பான நோயான பார்க்கின்சன் நோய், 'டோபமைன்' எனும் வேதிப்பொருளை உற்பத்தி செய்யும் நியூரான்களின் செயலிழப்பை கொண்டு வகைப்படுத்தப்படுகிறது. நியூரான்களின் செயலிழப்பு மூளையின் செயல்பாட்டில் குழப்பங்களுக்கும், சிக்கல்களுக்கும் வழி வகுக்கிறது.

இந்த சேதத்தை சரி செய்ய, டோபமைன் எனும் நரம்பியல் கடத்தியான வேதிப்பொருளை உற்பத்தி செய்யும் நியூரான்களின் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வகத்தில் இந்த சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட விலங்குகள் மற்றும் நோயாளிகளுக்கு, சிகிச்சைக்கு பிறகு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் ஆய்வக நிலையான இந்த சிகிச்சையை, மருத்துவமனைகளின் நிலைக்கு கொண்டு வருவது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

ஏனெனில் இதுநாள்வரை, கருவின் திசுக்களில் இருந்து குறிப்பிட்ட ஒரு வரம்புக்குள் நியூரான்கள் பெறப்பட்டு வருகின்றன. ஆனால், ஒரு நோயாளியின் இறந்த ஆயிரக்கணக்கான நியூரான்களுக்கு மாற்றாக தேவைப்படும் புதிய நியூரான்களை பெறுவதற்கான ஆதாரம் தேவை என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

இதற்கு, 'ஸ்டெம் செல்' மருத்துவ தொழில்நுட்பம் தான் சந்தேகத்திற்கு இடமின்றி சிறந்த வழி என்றும் கூறுகின்றனர் அவர்கள்.

இந்த முறையில் பெறப்படும் நியூரான்களை கொண்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து முடித்தவுடன் சிக்கலான இந்த சோதனை முடிந்துவிடுவதில்லை. ஒருவருக்கு செலுத்தப்படும் புதிய நியூரான்கள் தொடர்ந்து உயிர்ப்புடன் இருப்பதையும், அவை அருகில் உள்ள நியூரான்களுடன் நல்ல தொடர்பில் இருப்பதையும் மருத்துவர்கள் உறுதி செய்தாக வேண்டும்.

இவை அனைத்துக்கு பிறகும், மூளையின் மீளுருவாக்க திறன் நரம்பியல் வல்லுநர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய இயலாத அளவுக்கு இருக்கலாம். ஆனால் அறிவியலை நம்புங்கள் என்று கூறும் நிபுணர்கள், மூளையை போன்று அறிவியலும் நிபுணத்துவம் வாய்ந்தது என்கின்றனர்.

# பொன்னம்பலத்தின் கைது முன்னிலைப்படுத்தும் அக்கறைக்குரிய இரு விவகாரங்கள்



கலாநிதி ஜெகான் பெரேரா

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது குறிப்பான அக்கறைக்குரிய இரு விவகாரங்களை முதன்மைப்படுத்துகிறது. முதலாவது, வடக்கு, கிழக்கின் முன்னாள் போர் வலயங்களில் தொடரும் உயர்மட்ட நிலையிலான கண்காணிப்பு. நாட்டின் அந்த பாகங்களுக்கு செல்பவர்கள் இரு மாகாணங்களிலும் சீருடையுடன் மிகவும் பெருமளவில் படையினரின் பிரசன்னத்தை காணத் தவறமாட்டார்கள். சுற்றுலா தலங்களிலும் கூட இதுவே நிலைமை.

அந்த படையினர் 1970 களின் பிற்பகுதியில் தொடங்கி 2009 மே மாதம் முடிவுக்குவந்த அமைதியைக் குலைத்த வன்முறை நிலைவரத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.14 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், நாடு அதன் வன்முறைக் கடந்த காலத்தின் மரபை வெற்றிகொள்ளத் தவறியமையை உருவகப்படுத்துவதாக பாதுகாப்பு படைகளுக்காக இன்னமும் செலவிடப்படும் பாரிய செலவினம் அமைந்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் கூட பாதுகாப்புக்கு பெரும் நிதி ஒதுக்கப்படுகிறது.

2023 பட்ஜெட் மதிப்பீடுகளின் பிரகாரம் அரசாங்க ஊழியர்களின் மொத்த சம்பளங்களில் பாதுகாப்பு துறையினரின் சம்பளம் 48 சதவீதமாக இருக்கிறது என்று வெறைட் றிசேர்ச் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பிந்திய தகவல்கள் கூறுகின்றன. சம்பளங்களுக்கான மொத்த செலவினத்தில் 32 சதவீதத்தை இராணுவம் எடுத்துக்கொள்கிறது. 16 சதவீதம் ஏனைய பாதுகாப்பு சேவைகளுக்கு போகிறது.

உலக வங்கியின் தரவுகளின்படி இலங்கையின் ஆயுதப்படைகளின் அளவு 2017 - 2019 காலப்பகுதியில் 317,000 பேராக இருந்தது. 2021 தெற்காசிய கற்கைகளுக்கான நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கையின் இராணுவம் உலகில் 17 வது பெரிய இராணுவமாக - ஐக்கிய இராச்சியத்தினதையும் விட கூடுதலானதாக - இருக்கிறது. இராணுவத்தின் பெரிய படைப்பிரிவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே தொடர்ந்து நிலைவைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அரசாங்கத்துக்கு எதிரான உணர்வுகளுக்கு வளமான களமாக அந்த மாகாணங்கள் அமைகின்றன.

நில அபகரிப்புக்கு ஆதரவாக இருப்பது மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பது உட்பட தமிழ் மக்களை பெரிதும் பாதிக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவதாக வடக்கு, கிழக்கில் மக்கள் பரவலாக உணருகிறார்கள். ஆனால் போதைப் பொருளுக்கு கடுமையாக அடிமையாகும் போக்கும் குற்றச்செயல்கள் அதிகரிப்பும் வடக்கு, கிழக்கிற்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல, நாட்டின் ஏனைய பாகங்களிலும் அவை நிலவுகின்றன. குறிப்பாக தலைநகர் கொழும்பைக் கூறமுடியும்.

வடக்கு, கிழக்கை போலன்றி, தென்னிலங்கையில் பிரதான சந்தேகத்துக்குரியவர்களாக பெரும் பணம் பண்ணும் பேராசையில் பழிபாவத்துக்கு அஞ்சாத பாதகச்செயல்களில் ஈடுபடக்கூடிய - சகல அதிகாரங்களும் கொண்ட அரசியல்வாதிகளே விளங்குகிறார்கள். தங்களது கருவிகளாக பாதுகாப்பு படையினரை அவர்கள் பயன்படுத்தக்கூடும். இந்த உணர்வுதான் அறகலய போராட்டத்தின் போது மொத்தம் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற சுலோகத்தை பிரபல்யப்படுத்தியது.

## நாடளாவிய கண்காணிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட சம்பவம் வடக்கில் நிலவும் கண்காணிப்பு பிரச்சினையை மையமாகக் கொண்டதாகும். பொது



மைதானமொன்றில் விளையாட்டு கழகம் ஒன்றைச் சேர்ந்த சுமார் இருபது ஆதரவாளர்களை சந்தித்துக்கொண்டிருந்ததாக அவர் கூறுகிறார். அவர்களுடன் தான் பேசிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். 15 - 20 அடி தூரத்தில் தங்கள் வாகனத்தை நிறுத்திய அவர்களிடம் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டு அடையாள அட்டைகளை காட்டுமாறு கேட்டபோது அதற்கு அவர்கள் மறுத்தார்கள் என்று பொன்னம்பலம் கூறினார்.

சிவில் உடையில் வந்த அவ்விருவரும் புலனாய்வு தகவல்களை திரட்டவந்த பொலிஸ்காரர்கள் என்று பிறகு கூறப்பட்டது. வடக்கு, கிழக்கில் இவ்வாறு நடைபெறுவது வழமையானதாகும். ஆனால் நிகழ்வுகளில் பங்கேற்பவர்களுக்கு அசௌகரியத்தை தரக்கூடியதாக நாட்டின் ஏனைய பாகங்களிலும் இவ்வாறு இடம்பெறுகிறது.

இலங்கை இன்று துரதிர்ஷ்டவசமாக போருக்கான மூலக்காரணிகளைக் கையாளக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காணத் தவறிய நாடாக இருக்கிறது. போருக்கு பின்னராக நாடாக மாத்திரமல்ல அறகலயவுக்கு பின்னரான சமுதாயமாகவும் இருக்கிறது. வீழ்ச்சிகண்ட பொருளாதாரம் மக்களுக்கு சொல்லொணா இடர்பாடுகளைக் கொடுத்தது. மக்கள் தங்கள் விருப்பங்களையும் ஆட்சியாளர்களிடம் இருந்து எதிர்பார்ப்பவற்றையும் வெளிப்படுத்துவதற்கு வகைசெய்யக்கூடிய தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் காட்டும் மறுப்பு நிலைவரத்தை மேலும் மோசமயைச் செய்கிறது. இத்தகைய சூழ்நிலையில், வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்படுவதைப் போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகள் நாட்டின் ஏனைய பாகங்களிலும் அமைதியின்மை தோன்றக்கூடிய இடங்கள் குறித்து அரசாங்கத்துக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்வதற்காக முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கில் கூடுதலான அளவுக்கு வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் மேற்கொள்ளப்படுவதே வித்தியாசமாகும். தென்னிலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவாளர்களை சந்தித்துக்கொண்டிருக்கும்போது அங்கு பேசப்படுவதை ஒற்றுக்கேட்பதற்கு பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் 10- 15 அடி அண்மையாக மோட்டார் சைக்கிளில் வருவது சாத்தியமில்லை.

இரண்டாவது பிரச்சினை பொன்னம்பலம் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற மரியாதை காட்டப்படாமல் அவர் கைதுசெய்யப்பட்ட முறையில் இருந்து எழுகிறது. இது வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பு படைகள் 'ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம்' போன்று நடந்துகொள்கின்றன என்பதை தமிழ் மக்களுக்கு ஊர்ஜிதப்படுத்துகிறது. பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்கு மூலத்தைக் கொடுக்குமாறு பொன்னம்பலத்தை பொலிசார் கேட்டபோதிலும், முன்னதாக மைதானத்தில் வாக்குவாதத்தின்போது தன்னை நோக்கி துப்பாக்கி நீட்டப்பட்ட காரணத்தால் பொலிஸ் நிலையம் சென்றால் தனக்கு பகைமையான சூழல் காணப்படும் என்ற காரணத்தால் அங்கு செல்ல அவர் விரும்பவில்லை.

பொலிசார் அதற்கு பிறகு கொழும்பில் உள்ள வீட்டில் வைத்து அவரைக் கைது செய்து வாக்குமூலம் பெறுவதற்காகவும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காகவும் மீண்டும் வடக்கிற்கு கூட்டிச் சென்றனர். அண்மைய கடந்த காலத்தில் வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆத்திரமூட்டக்கூடிய வகையில் நடந்துகொண்ட சந்தப்பங்களிலும் கூட அவர்களை பொலிசார் கடுமையாக நடத்தாமல் விட்டதை பொன்னம்பலத்தின் கைதுடன் நோக்கும்போது அது ஒரு மனக்கசப்பான ஒப்பீடாக அமைகிறது.

## சமத்துவ குடியுரிமை

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள கூடுதலான அளவுக்கு கடும்போக்குடைய பிரிவுகளுடன் நெருக்கமான உறவைக்கொண்டிருப்பது உட்பட தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கடைப்பிடிக்கும் முனைப்பான தமிழ்த்தேசிய நிலைப்பாடுகள் தெற்கில் இருந்தும் சிங்கள அரசியல் சமுதாயத்திடமிருந்தும் அவரை பெருமளவுக்கு தூரவிலக்கிவிட்டது. அவர் கைது செய்யப்பட்டதையும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகள் குறித்தும் தெற்கின் சிங்கள பெரும்பான்மை இன பகுதிகளைச் சேர்ந்த ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டதாக 'தி இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனால், கைதுசெய்யப்படுகின்றபோது சிங்கள மொழியில் பொன்னம்பலம் கருத்துக்களை வெளியிட்ட பாங்கு இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதிக்காக போராடுவதில் அவர் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் அறிகுறியாகும். இதை ஊக்கப்படுத்தவேண்டுமே தவிர ஒடுக்கக்கூடாது.

"பொன்னம்பலம் இன்றைக்கே மருதங்கேணிக்கு சென்று வாக்குமூலம் கொடுக்கவேண்டும் அல்லது அவரைக் கைதுசெய்யப்போவதாக பொலிசார் அச்சுறுத்தியது முற்றிலும் சட்டவிரோதமானதாகும். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அது அவரது சிறப்புரிமையை மீறும் செயலாகும். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்வதில் இருந்து அவர் தடுக்கப்படுகிறார். இது அடக்குமுறையாகும்" என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ருவிட்டரில் பதிவுசெய்தார்.

போட்டி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சுமந்திரன் வெளிக்காட்டிய ஒருமைப்பாடு நேர்மறையான ஒரு அம்சமாகும். அரசாங்கத்துடனான தங்களின் பேச்சுவார்த்தைகளில் நியாயமான பேரம்பேசும் வல்லமையை பெறவேண்டுமானால் தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியம் ஏற்படவேண்டியது அவசியமாகும். கைதுக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வெளிக்காட்டிய எதிர்ப்பு பொன்னம்பலத்துக்கு சக பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஆதரவு மிகவும் குறைவு என்ற தமிழ் ஊடகங்களின் செய்த செய்திகளை மறுதலிப்பதாக அமைந்தது.

"பாராளுமன்ற உறுப்பினர் பொன்னமப்பலத்தின் கோட்பாட்டுடனும் நிலைப்பாடுகளுடனும் எமக்கு வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்த சபையில் வேறு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரைப் போன்றும் நடத்தப்படுவதற்கு அவருக்கு உரித்து இருக்கிறது. சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்றத்துக்கு தயாராகிக்கொண்டிருந்தவேளை அவர் இன்று பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அது சட்டவிரோதமானது.சட்டத்தை மதித்துச் செயற்படுமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். இது ஒரு சட்டவிரோதமான கைது" என்று அவர் கூறினார். சகல சமூகங்களினதும் பொதுவான வாழ்விடமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அவசியமான தேசிய ஐக்கியம் மற்றும் சமத்துவ குடியுரிமை உணர்வை எதிர்க்கட்சி தலைவர் வெளிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் எதிரெதிர் பக்கங்களில் இருந்தாலும், தேசிய விவகாரங்களை கையாளுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவும் உயர்ந்த பொறுப்புக்களில் இருக்கும் இன்றைய காலகட்டம் கடந்த கால பிரச்சினைகளையும் சமகால பிரச்சினைகளையும் சீர்செய்வதற்கு சிறந்த ஒரு வாய்ப்பாகும். ஜெனீவாவில் அடுத்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், ஜனாதிபதி விக்கிரமசிங்க கூட்டிய சிரேஷ்ட அரச அதிகாரிகளின் கூட்டத்தில் நல்லிணக்க நடவடிக்கை திட்டம் ஒன்று குறித்து ஆராயப்பட்டது.

அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டங்களை வரைவதை துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களை ஜனாதிபதி அறிவுறுத்தினார். சட்டவாக்கத்துக்கான ஐந்து முக்கிய விவகாரங்கள், நிறுவன ரீதியான நடவடிக்கைகள், காணிப் பிரச்னைகள், கைதிகள் விடுதலை மற்றும் அதிகாரப் பன்முகப்படுத்தல் ஆகியவை தொடர்பிலான முன்முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது. வார்த்தைகளில் பெருமளவு விடயங்கள் கூறப்பட்டுவிட்ட போதிலும் நடைமுறையில் களத்தில் பெரிதாக எதையும் காண முடியவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலத்தின் கைது தொடர்பிலான பிரச்சினையை கையாளுவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறை மாற்றத்துக்கான ஒரு சான்றாக அமையும்.

# அமரகீர்த்தி எம். பி. கொலை 42 பேருக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஜூன் 14

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல மற்றும் அவரின் பாதுகாவலர் ஆகியோரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 42 சந்தேக நபர்களுக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த வருடம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின்போது மே மாதம் 9ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

(ஐ)

# கட்டயாமாக இரு தேர்தல்களை அரசு நடத்தியே ஆகவேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 14

இரண்டு தேர்தல்களை கட்டாயம் நடத்தியே ஆக வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பணிமனையியல் நேற்று நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தொழிலாளர் உரிமை தொடர்பான புதிய சட்டமூலம் ஒன்றை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்பிலேயே கலந்துரையாடப் பட்டது. எமது கட்சியின் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்தோம். ஜனாதிபதி தேர்தலுக்கான தயார்படுத்தல் தொடர்பில் தற்போதைய நிலையில் கருத்துக்களை கூற முடியாது. எனினும் எந்த தேர்தலையும் எதிர்கொள்வதற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது.

நாட்டின் பொருளாதாரம் என்பது எவ்வாறான நிலையில் இருக்கின்றது என்பதை நடைபாதையில் பயணிப்பவர்களிடம் சென்று கேட்டால் கூறுவார்கள்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் மக்களிடமே கேட்க வேண்டும். பொருளாதாரத்தின் தாக்கத்தை மக்களே உணர்ந்திருப்பர். அரசாங்கம் தேர்தலை நடத்துவதில் உடன்பாடற்ற நிலையில் காணப்பட்டாலும் அடுத்த வரும் இரண்டு தேர்தல்களை எவ்வாறாயினும் நடத்தியே ஆக வேண்டும். ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் அடுத்த வருடம் அரசாங்கம் நடத்தியே ஆக வேண்டும் - என்றார்.

(ஐ)

# தேர்தலை நடத்துமாறு மக்கள் கோரவில்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜூன் 14

மக்கள் தேர்தலை நடத்துமாறு கோரவில்லை எனவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்குமாறே அவர்கள் கோரியதாகவும் நாடு ஸ்திரத்தன்மையை அடைந்த பின்னர் தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் பயணிகள் மற்றும் விருந்தினர்களுக்கான மண்டபம் மற்றும் உணவகத்தை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட் நிலைமை, 12 மாதங்கள் கடந்து தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து மக்கள் நேர்மறையாக சிந்திக்க முடிந்துள்ளது.

மக்களின் ஒத்துழைப்புகள் இல்லாமல் தனியாக அரசாங்கம் இதனை செய்ய முடியாது.

போராட்டகாரர்கள் ஏற்படுத்திய அழிவு, ஈஸ்டர் தாக்குதல், கோவிட் தொற்று நோய் என்பன காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் நாடு என்ற வகையில் நாம் எதிர்நோக்கிய பிரச்னைகளை மறக்க முடியாது.

நாடு தற்போதைய நிலைமையை அடைய மக்கள் பெரும் அர்ப்பணிப்புகளை செய்ய நேரிட்டது.

தற்போதும் வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடத்துகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் வருவதை தடுத்து நாட்டை அராஜக நிலைமைக்கு கொண்டு செல்ல அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுகின்றனர்.

மக்கள் இதனை புரிந்து கொண்டுள்ளதுடன் அவற்றுக்கு தற்போது ஆதரவு வழங்குவதில்லை.

வர்த்தகர்களை குறை கூற முடியாது. அனைவரும் கஷ்ட மான காலத்தை எதிர்நோக்கியவர்கள்.

வர்த்தகர்கள் தமக்கு ஓரளவு இலாபத்தை வைத்துக்கொண்டு நாட்டு மக்களுக்கு நிவார ணத்தை வழங்க வேண் டும்.

அதேவேளை உண்மையில் நாங்கள் ஊடக சுதந்திரத்தை மதிக்கின்றோம்.

மக்களுக்கு கருத்து சுதந்திரம் இருக்கின்றது. எனினும் அந்த சுதந்திரத்தை தவறான முறையில் பயன்படுத்துவது தவறு.

இவற்றால் நான் பாதிக்கப்பட்டவன். ஊடகம் ஒரு செய்தியை வெளியிடுமாயின் அதன் பொறுப்பை ஏற்று அதனை வெளியிட வேண்டும்.

செய்தியை வெளியிட்டு விட்டு மறுநாள் சிறிய எழுத்தில் மன்னிப்பு கோரக்கூடாது.

நாட்டை தூண்டி விடக் கூடாது. போராட்டம் நடைபெற்ற காலத்தில் ஊடகங்கள் எப்படி நடந்துக்கொண்டன என்பதை நாங்கள் பார்த்தோம்.

எங்களை விட ஊடகவியலாளர்கள் இதனை நன்றாக அறிவீர்கள் - என்றார். (அ)






# நவயுகத்தோடு இணைந்த புதிய ஊடக செயல்பாடுகள் வேண்டும்

நிந்தவூர், ஜுன் 14

“நவயுகத்தோடு இணைந்த புதிய ஊடக செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படுவதோடு, ஊடகத்துறை மூலம் புதிய யுத்தை உருவாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.”

-இவ்வாறு, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எம்.ஏ. கமல் நெத்மினி கூறினார்.

அம்பாறை மாவட்ட ஊடக வியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நவீன டிஜிற்றல் ஊடகவியல் எனும் தலைப்பிலான செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட ஊடக வியலாளர் சங்கத் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான வசந்த சந்திரபால தலைமையில், அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் முழு நாள் அமர்வாக இந்த செயலமர்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் 40 பேர் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

தலா 20 பேர் வீதம், இரு தினங்கள் வெற்றிகரமாகவும், மிகப் பயனுள்ளதாகவும் இந்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செயலமர்வில், டிஜிற்றல் ஊடகத்துறை விற்பன்னர்களான ஜயசிறி ஜயசேகர, மெட்லால் வீர சூரிய ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.



செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

நாட்டில் சக்தி மிக்க, பலம் பொருந்திய ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத் துறைக்குப் பலம் சேர்க்கும் பிராந்திய ஊடகவியலாளர்கள் மிகவும் முக்கியத்துவமிக்கவர்களாவர்.

மக்கள் பிரதிநிதிகளையும் நல்லாட்சியையும் உருவாக்கும் சக்தி மிக்க ஊடகவியலாளர்கள் நவீன யுக வளர்ச்சிக்கு ஏற்ப பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் இத்தகைய செயலமர்வை ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தையும் குறிப்பாக இதன் முக்கிய சூத்திரதாரியான சிரேஷ்ட ஊடகவியலாளர் வசந்த சந்திர பாலவையும் விதந்து பாராட்டக்கடமைப் பட்டுள்ளோம் -என்றார்.

(அ-06)

# மழை பெய்ய வேண்டி குனூத் ஓதுமாறு அம்பாறை உலமா சபை வேண்டுகோள்

நிந்தவூர், ஜுன் 14

மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவில் நீடித்துச் செல்கின்ற அதிகூடிய வெப்பம் நிறைந்த காலநிலையை தணிப்பதற்காக மழை பொழிய வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் ஓதுமாறு அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் மேற்படி உலமா சபையின் தலைவர் ஐ.எல்.எம். ஹாஷிம் மௌலவி தலைமையில் இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக இவ்வேண்டுகோள் விடுக்கப்படுவதாக அதன் செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி மௌலவி தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் அந் நாஸிலாவை ஓதுமாறு பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் இமாம்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், வெள்ளிக்கிழமை குத்பாவில் மழை வேண்டி விசேடமாக பிரார்த்திக்குமாறும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் மழை வேண்டி தொழுகை நடத்துமாறும் அம்பாறை மாவட்ட உலமா சபை வேண்டுகோள் விடுப்பதாக செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி தெரிவித்தார்.

(அ)

# கதிர்காம யாத்திரீகர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டது

காரைதீவு, ஜுன் 14

கதிர்காம காட்டுப் பாதை வழியாக கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு, முதல் நாள் முதல் தரிப்பிடமான வாகூர வெட்டையில்( வண்ணாத்திர கிணற்றடி) இலைக்கஞ்சி நேற்று முன் தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

பிரபல சமூக சேவையாளரும், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அவர் தலைமையிலான குழுவினர் காட்டுக்குள் இவ் இலைக் கஞ்சியை காய்ச்சி சுடச்சுட வழங்கினார்கள்.

(அ)

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட 6 பேர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஜுன் 14

**மட்டக்களப்பு வாழைச்சேனையில் 80 கிராம் ஹரோயின் போதைப்பொருள், கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பேர் உட்பட 6 பேரை கைது செய்துள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.**

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து 80 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் 3 பேரை கைது செய்தனர்.

அதேவேளை கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை 450 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்

இதனை தொடர்ந்து 12 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை மீட்டதுடன் இவ்வாறு வெவ்வேறு சட்டவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்ட 6 பேரையும் கைது செய்துள்ளனர்.

(அ)

# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு தென்கொரிய முதலீட்டாளர்கள்

மட்டக்களப்பு, ஜுன் 14

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தனின் கோரிக்கை அமைவாக தென்கொரிய முதலீட்டாளர்கள் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான குழுவினர் தென்கொரிய முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது .

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன், மாவட்டத்தில் உள்ள வளங்களை தென் கொரிய முதலிட்டாளர்கள் அறிந்துகொள்ளுவதற்காக மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமாரினால் முன்னறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மாவட்டத்தின் பிரதான உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினர்.

அத்துடன் மாவட்டத்தில் சூரிய மின்சார உற்பத்திக்கு உகந்த காலநிலை காணப்படுவதனால் களப்பில் மிதக்கும் மின்கலங்களினால் மின்சாரம் உற்பத்தி மேற்கொள்ள துறை சார் நிபுணர்களினால் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

(அ)

# மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியில் நடந்த ‘ஒன்றிணைந்த ஆரம்ப கல்வி’ நூல் வெளியீட்டுவிழா

மட்டக்களப்பு, ஜுன் 14

மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளரும், நூலாசிரியருமான இராசேந்திரம் வேல்சிவத்தினால் எழுதப்பட்ட “ஒன்றிணைந்த ஆரம்ப கல்வி” எனும் நூல் வெளியீட்டு விழா மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி த.கணேசரெத்தினம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்வி, பிள்ளை நலத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செல்லையா அருள்மொழி, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் க.ஞானரெத்தினம், அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கி.புண்ணியமூர்த்தியும்,கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் சி.மனோகரன்,மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் உப பீடாதிபதி,முன்னாள் உப-பீடாதிபதி, விரிவுரையாளர்கள், கல்வியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்சி மாணவர்கள், மதத்தலைவர்கள், பொது மக்கள் கலந்துகொண்டார்கள்.



இவ்வெளியீட்டு விழாவில் வருகைதந்த அதிதிகளை மாலை அணிவித்து வரவேற்றதுடன், மங்கள விளக்கேற்றி, இறைவணக்கம் நிகழ்த்தப்பட்டதுடன், வரவேற்பு நடனம், ஆசியுரை, தலைமையுரை, நூல் வெளியீடு, நூல்பிரதி வழங்கல், ஆசான்களை கௌரவித்தல், நயவுரை, ஏற்புரை இடம்பெற்று நிகழ்வுகள் முற்றுப்பெற்றன.

(அ)

# காத்தான்குடி பிரதேச டெங்கு தடுப்பு செயலணியின் கூட்டம்

மட்டக்களப்பு, ஜுன் 14

காத்தான்குடி பிரதேச டெங்கு தடுப்பு செயலணியின் கூட்டம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளரும் காத்தான்குடி பிரதேச டெங்கு தடுப்பு செயலணியின் தலைவருமான யு.உதய ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் நசிரீதீன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.

(அ)

# உக்ரைனின் பதிலடியால் போர் முடிவுக்கு வரும்!

## அமெரிக்கா நம்பிக்கை

நியூயோர்க், ஜுன் 14

**உக்ரைனின் வெற்றிகரமான பதிலடி தாக்குதல் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைக்கு ரஷ்ய அதிபர் புடினைத் தள்ளும் என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன் தெரிவித்துள்ளார்.**



உக்ரைன் - ரஷ்யா போரானது ஓராண்டுகளை கடந்து இடம்பெற்று வரும் நிலையில், கெர்சன், டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் பெரும்பாலான இடங்களை ரஷ்யா தன்வசமாகியுள்ளது.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்தும் ஆயுத உதவிகளை வழங்கி வருவதால் இழந்த இடங்களை மீட்பதற்காக உக்ரைன் எதிர்த் தாக்குதலை நடத்தி வருகின்றது.

அந்த அடிப்படையில் இன்றைய நிலவரப்படி ஏழு கிராமங்களை உக்ரைன் மீட்டுள்ள சூழலில் எதிர்த் தாக்குதலில் இது கூறத்தக்க முன்னேற்றம் என உக்ரைன் நம்புகின்றது.

சில பகுதிகளில் அனைத்து திசையிலும் இருந்து உக்ரைன் பதிலடி கொடுப்பதால் ரஷ்ய வீரர்களால் அதை எதிர்கொள்ள முடியாமையால் அவர்கள் பின்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், உக்ரைனின் வெற்றிகரமான பதிலடி தாக்குதல் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைக்கு ரஷ்ய அதிபர் புடினைத் தள்ளும் என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

பிளிங்கன், இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் அன்டோனியா தஜானியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இவ்வாறு கூறினார். (அ)



# உக்ரைன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ட்ரோன் மூலம் குடிதண்ணீர்

கீவ், ஜுன் 14

உக்ரைன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவம் ட்ரோன் மூலம் குடிதண்ணீர் வழங்கி வருகிறது.

உக்ரைனில் பல குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் வசித்த உக்ரேனிய மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்குட்பட்ட தெற்கு உக்ரேனின் கெர்சன் பகுதியில் அமைந்திருந்த மிகப்பெரிய அணையான கக்வோவ்கா அணை தகர்க்கப்பட்டதால், அதிலிருந்து வெளியேறிய பெருமளவு தண்ணீர், சுற்றியுள்ள நிலப் பகுதிகளைச் சூழ்ந்துள்ளது. (அ)

# உக்ரைனின் உயர்மட்ட இராணுவத் தலைவர்கள் 5 பேருடன் நெருங்கிய தொடர்பில் ஜெலென்ஸ்கி!

கீவ், ஜுன் 13

உக்ரைனில் படையெடுக்கும் ரஷ்யப் படைகளுக்கு எதிராக எதிர் தாக்குதல் நடவடிக்கைகளை உக்ரைன் படைகள் மேற்கொண்டு வருவதாகவும், ஆனால் அது தொடர்பான எவ்வித தகவல்களையும் வெளிப்படையாக வழங்க முடியாது எனவும் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை தெரிவித்தார்.

“உக்ரைனின் உயர்மட்ட இராணுவத் தலைவர்கள் ஐந்து பேருடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றேன்” எனவும் ஜெலென்ஸ்கி இதன்போது தெரிவித்துள்ளார்.



உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உக்ரைன் படைகள் பல்வேறு வெற்றிகளை பெற்று வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

அத்துடன் எதிர் தாக்குதல்களை அடக்குவதில் தமது படைகள் வெற்றி பெற்றுள்ளதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பிரபல பாடகர் சிக்கினார்

மொஸ்கோ, ஜுன் 14

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பாடகரான மைக்கேல் ட்ராவிஸை ரஷ்யப் பொலிஸார் மொஸ்கோவில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

ரஷ்யாவில் அமைக்காலமாகப் போதைப் பொருள் விற்பனை அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அந்நாட்டுப் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதே சமயம் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் அந்நாட்டு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் தங்கியுள்ள பாடகர் மைக்கேல் ட்ராவிஸ், கொக்கெய்ன் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக ரஷ்ய பொலிஸாருக்கு இரகசியத் தகவலொன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து மைக்கேல் ட்ராவிஸ்ஸிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் உயர் ரகப் போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவில் மக்கள் தொகை வீழ்ச்சி!

## திருமண பதிவு எண்ணிக்கையிலும் சரிவு



பீஜிங், ஜுன் 14

சீனாவில் மக்கள் தொகையில் வீழ்ச்சயிடைந்த காணப்படும் நிலையில், தற்போது திருமண பதிவின் எண்ணிக்கையிலும் சரிவை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டில் திருமண பதிவுகள் வீழ்ச்சயிடைந்துள்ளதாக சீனாவில் உள்ள செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக திருமண பதிவு ஒரு நிலையான சரிவைக் கண்டு வருவதாகவும், கொரோனா காலத்தினால் திருமணத்தின் மொத்த எண்ணிக்கையும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு வெறும் 6.83 மில்லியன் தம்பதிகள் தங்கள் திருமணப் பதிவை செய்துள்ளனர். இதுவே, சிவில் விவகார அமைச்சகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட தரவுப்படி, முந்தைய ஆண்டை விட சுமார் 800,000 பதிவுகள் சரிவை கண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொரோனா தொற்று காரணத்தால் ஊரடங்கில் பல வாரங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளிலோ அல்லது வளாகத்திலோ அடைபட்டு கிடந்தனர். இதனால் பிறப்பு விகிதம் மற்றும் மக்கள் தொகை வீழ்ச்சியடைந்ததாக குறிப்பிடப்படுகிறது.

2022ஆம் ஆண்டில், ஆறு சதாப்தங்களில் இல்லாத அளவில் முதல் முறையாக சீனாவின் மக்கள்தொகையில் பாரிய வீழ்ச்சியை கண்டு கொண்டுள்ளது.

சீனாவின் பிறப்பு விகிதம் கடந்த ஆண்டு 1,000 பேருக்கு 6.77 குழந்தைகளாகக் குறைந்துள்ளதாகவும், 2021 இல் 7.52 ஆக இருந்தது. மக்கள்தொகையை அதிகரிக்கவும் ஏற்கனவே, திருமணத்தை ஊக்குவிக்கவும், பிறப்பு விகிதத்தை அதிகரிக்கவும், கடந்த மாதம் 20 இற்கும் மேற்பட்ட புதிய திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சீனா தெரிவித்துள்ளது. (அ)

# இத்தாலி முன்னாள் பிரதமர் பெர்லுஸ்கோனி காலமானார்

ரோம், ஜுன் 14

இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி தனது 86ஆவது வயதில் காலமானார்.

சில்வியோ பெர்லுஸ்கோனி 1994 முதல் 95 வரை மற்றும் 2001 முதல் 2006 வரை மற்றும் 2008 முதல் 2011 வரை இத்தாலியின் பிரதமராக கடமையாற்றினார்.

86 வயதான பெர்லுஸ்கோணிக்கு கடந்த ஏப்ரல் மாதம் நுரையீரல் நோய் தொற்று ஏற்பட்டதுடன் மிலானில் உள்ள சென் ரபேல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.



இந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

பெர்லுஸ்கோனியின் மரணம் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது எனவும் இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சர் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இத்தாலி முன்னாள் பிரதமரின் மறைவிக்கு பல்வேறு நாட்டு தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (அ)

# முழுத் தொடருக்காக இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகள் செல்கின்றது



புதுடில்லி, ஜூன் 14
இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 3 ஒரு நாள், 5 இருபது -20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.


இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

ஜூலை 12 முதல் 16 வரை முதல் டெஸ்ட் போட்டியும் ஜூலை 20 முதல் 24 வரை 2ஆவது டெஸ்ட் போட்டியும் நடைபெறும்.

ஒருநாள் தொடர் 27, 29 மற்றும் ஒகஸ்ட் 1ஆம் திகதியும் இருபது - 20 தொடர் ஒகஸ்ட் 3, 6, 8, 12, 13 ஆகிய திகதிகளிலும் நடக்கவுள்ளன.

இலங்கை நேரப்படி டெஸ்ட் போட்டிகள் இரவு 7.30 மணிக்கும் ஒருநாள் போட்டி இரவு 7 மணிக்கும், இருபது - 20 தொடர் இரவு 8 மணிக்கும் நடக்கும்.

(ஐ)



# மே மாதத்தின் சிறந்த வீரராக அயர்லாந்தின் டெக்டர் தெரிவு

டுபாய், ஜூன் 14
ஐ. சி. சியின் மே மாதத்துக்கான சிறந்த வீரர் விருது அயர்லாந்தின் ஹாரி டெக்டருக்கும், சிறந்த வீராங்கனை விருது தாய்லாந்தின் திபாட்சா புத்தாவோங்குக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) ஒவ்வொரு மாதமும் சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது. இந்நிலையில் மே மாதத்துக்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைகளை தெரிவு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

இதன்படி மே மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பட்டியலில் பாகிஸ்தானின் பாபர் அஸாம், பங்களாதேஷின் நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ, அயர்லாந்தின் ஹாரி டெக்டர் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

மே மாதத்துக்கான சிறந்த வீராங்கனை விருதுக்கு இலங்கையின் சமரி அத்தபத்து, ஹர்ஷிதா மாதவி ஆகியோரும், தாய்லாந்தின் திபாட்சா புத்தாவோங் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மே மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை விருது வென்றவர்களை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. இதன்படி மே மாதத்துக்கான சிறந்த வீரர் விருது அயர்லாந்தின் ஹாரி டெக்டருக்கும், சிறந்த வீராங்கனை விருது தாய்லாந்தின் திபாட்சா புத்தாவோங்குக்கும் வழங்கப்பட்டுள்ளது.

# எல். பி. எல். வீரர்கள் ஏலம் இன்று; சுரேஷ் ரெய்னாவும் களத்தில்!

கொழும்பு, ஜூன் 14
எல். பி. எல். இருபது - 20 என்று அறியப்பட்ட லங்கா பிறிமியர் லீக் அடுத்த மாதம் தொடங்குகிறது. இதற்கான ஏலப்பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தனது பெயரை பதிவு செய்துள்ளார்.

வீரர்களுக்கான ஏலம் இன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. போட்டிகள் ஜூலை 31ஆம் திகதி தொடங்குகிறது. ரெய்னா, ஆக்ரோஷமான ஆட்டத்துக்குப் பெயர் பெற்ற ஒரு சிறந்த முதல்தர துடுப்பாட்ட வீரராவார்.

ஐ. பி. எல். தொடக்கத்தில் இருந்து ஒரு சிறந்த வீரராக ஜொலித்தவர். அவர் ஐ. பி. எல்லில் 205 போட்டிகளில் விளையாடி 5,500 ஓட்டங்களை குவித்துள்ளார்.

ரெய்னா கடந்த ஆண்டு அனைத்து வகையான போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்தார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் விதிகளின்படி இந்திய வீரர் ஒருவர் ஏனைய நாடுகளின் லீக்குகளில் விளையாட அனைத்து வகையான உள்நாட்டு போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.





# ரென்னிஸ் தரவரிசை; ஜோகோவிச் முதலிடம்!

லண்டன், ஜூன் 14
பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் சர்வதேச ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார்.

பிரெஞ்சு ஓப்பன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜொகோவிச் நோர்வே வீரர் காஸ்பர் ரூட்டை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

கிராண்ட் ஸ்லம் போட்டிகளில் நோவக் ஜொகோவிச் வென்றுள்ள 23ஆவது பட்டம் இதுவாகும். இதன் மூலம் டென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட் ஸ்லம் பட்டங்கள் வென்றிருந்த ஸ்பெயினின் ரபேல் நடாலின் சாதனையை முறியடித்துள்ளார் ஜொகோவிச்.

பிரெஞ்சு ஓப்பனில் வாகை சூடிய ஜொகோவிச் ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார். முதலிடம் வகித்த ஸ்பெயினின் கார்லோஸ் அல்கரஸ் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இதேபோன்று ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவும் ஓர் இடம் பின்தங்கி 3ஆவது இடத்தில் உள்ளார்.

இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்த காஸ்பர் ரூட் 4ஆவது இடத்தில் தொடர்கிறார். ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்), ஹோல்கர் ரூன் (டென்மார்க்), ஆந்த்ரே ரூப்லெவ் (ரஷ்யா), ரெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா), ஜன்னிக் ஷின்னர் (இத்தாலி), கரன் கச்சனோவ் (ரஷ்யா) ஆகியோர் முறையே 5 முதல் 10ஆவது இடங்களில் உள்ளனர்.

14 முறை பிரெஞ்சு ஓபனில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபேல் நடால் 121 இடங்கள் பின்தங்கி 136ஆவது இடத்தில் உள்ளார். இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர், நீண்ட நாட்களாக ரென்னிஸ் போட்டிகளில் விளையாடாமல் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்து உருகுவே அணி சம்பியன்!

புவனர்ஸ்அயர்ஸ், ஜூன் 14
ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான 23ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் உருகுவே 1-0 கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

இந்தப் போட்டியில் உருகுவே சம்பியனானது இதுவே முதல் முறையாகும். கடந்த 4 பருவங்களில் ஐரோப்பிய அணிகள் ஆதிக்கம் செலுத்தி சம்பியனாகி வந்த நிலையில், தற்போது தென்னமெரிக்க கூட்டமைப்பைச் சேர்ந்த ஓர் அணி சம்பியனாகியிருக்கிறது.

இறுதி ஆட்டத்தில் உருகுவே - இத்தாலி அணிகள் விறுவிறுப்பாக மோதினாலும், உருகுவே சற்று ஆதிக்கம் செலுத்தியே வந்தது.




இதன் பலனாக 86ஆவது நிமிடத்தில் அந்த அணியின் லூசியானோ ரொட்ரிக்ஸ் தலையால் முட்டி கோல் அடித்து அணியின் வரலாற்று வெற்றிக்கு வித்திட்டார்.

போட்டியிலேயே சிறந்த வீரர் விருதும் அதிக கோல் அடித்த வீரர் விருதும் இத்தாலியின் சீசர் கசா டெய்க்கு வழங்கப்பட்டது.

(ஐ)

# தமிழ் பௌத்த வரலாற்றை ஏற்றுக்கொண்டார் ரணில்!

## அவரை பாராட்டுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 14

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான் பாராட்டுகிறேன். முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கை தீவின்“தமிழ் பௌத்த வரலாற்றை” பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கையின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் சாவியாகும்.”**



-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது:

தமிழரசுக் கட்சியினருடனான கலந்துரையாடலின் போது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளார். அதன்போது இலங்கை தீவின் “தமிழ் பௌத்த வரலாற்றை” பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்து கூறியுள்ளார்.

இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்கள தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள். அந்த விஜயன் வந்த இறங்கிய கதை பொய் யென்று என்னை தேடி வந்து வண. பிக்கு ஞானசாரர் சொன்னது போன்றும், இளவரசன் விஜயன் வரவை நினைவு கூர்ந்து, இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டு, பின்னர் அதை இரண்டு வருடங்களில் வாபஸ் பெற்றதைப்போன்றும், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதைப் போன்றும், வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப்போதும் மறைக்க முயன்று வருகிறார்கள்.

தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என நான் நம்புகிறேன். இந்நோக்கில், 2018ஆம் ஆண்டு நான் அமைச்சராக இருந்தபோது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றை பற்றி சான்றுகளுடன் எழுதிய, “தமிழ் பௌத்தன்” (தமிழ பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது. அந்த நூலை தேடி பிடித்து, பேசி, பேராசிரியரின் அனுமதியை பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில வண. பிக்குகள் கண்டித்துள்ளார்கள் என அறிந்தேன். என்னுடன் முரண்பட எவரும் வரவில்லை. இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போட்டு கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காம கந்தனும் காப்பாற்றட்டும்-என்றார்.

(அ)

# 300 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது!



வவுனியா, ஜூன் 14

வவுனியா, கோவில்குளம் சந்தியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருளான பிரீகபலின் மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

300 போதை மாத்திரைகளை விற்பனைக்காக எடுத்துச் சென்ற போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்றும், மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

(அ)

# அடுத்த மாதம் முதல் நலன்புரி கொடுப்பனவு

கொழும்பு, ஜூன் 14

‘அஸ்வெசும’ எனப்படும் ஆறுதல் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவை எதிர்பார்த்துள்ள பயனாளிகளின் தகவல் சரிபார்ப்பு பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக அவர் தமது டுவிற்றர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார். இந்த நலன்புரி கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் பயனாளிகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தினேஷ் ஷாப்டரின் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி கேட்ட மனைவி!

கொழும்பு, ஜூன் 14

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்கான காரணம் இதுவரை வெளிவராத நிலையில், அவர் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்தை தொடர்ந்து செயற்படுத்த அவரது மனைவி விடுத்த கோரிக்கைக்கு குற்றப் புலனாய்வு திணைக்களம் தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

ஷாப்டரின் மனைவி நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரியவிடம் விடுத்த கோரிக்கைக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகத் தரவு பதிவுகள் மற்றும் தொலைபேசிப் பதிவுகள் மரணத்தின் மர்மத்தை தீர்க்க உதவக்கூடும் என்று கூறிய சி.ஐ.டி, பகுப்பாய்வு அறிக்கைகளுக்காக தொலைபேசி அரசாங்க பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தரவுகள் அழிக்கப் பட்டிருக்குமா என்பது குறித்து மேலும் விசாரணை செய்து எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இறந்தவரின் மனைவி தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம் சம்பவம் தொடர்பான சாட்சியங்களை அழிக்க முடியுமா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஊடாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், தொலைபேசியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளை பாதுகாக்கும் முறை சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனத்திடம் உள்ளதா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ)

# தேசிய பாடசாலைகளை கண்காணிக்க விசேட குழு

கொழும்பு, ஜூன் 14

தேசிய பாடசாலைகளை மேற்பார்வையிட கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்றை உருவாக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலைகள் தொடர்பில் முறையான கண்காணிப்பு செயற்பாடுகள் இல்லாத காரணத்தினால் அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதுடன், அமைச்சின் தேசிய பாடசாலை பிரிவும் மாகாணக் கல்வி அமைச்சும் இணைந்து இந்த குழுவை நியமிக்கவுள்ளன.

முறையான ஒழுங்கு முறையைப் பின்பற்றி இந்தப் பாடசாலைகளை வழமையான நிலைக்குக் கொண்டுவருவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

# தோழர் சுபத்திரன்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

30 வருட யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் ஆன பின்னும் இவை பற்றி யாரும் கேள்வி எழுப்பி உள்ளனரா? நடந்த பிழைகள் பற்றி பேசப்பட்டனவா?

இந்த பிழைகளால் பல ஆயிரக்கணக் கானவர்கள் மடிந்திருக்கிறார்கள்.

அதை பற்றி சொரணை - சூடு எம்மிடம் இருக்கிறதா?

இந்த சமூகத்தில் அர்ப்பணத்துடன பணியாற்றி மரணித்த மனிதர்கள் மதிக்கப்படாவிட்டால் எமது கோரிக்கைளுக்கு என்ன தார்மீக வலு இருக்கும். செத்தவர்கள் போகட்டும் . இருப்பவர்கள் சமூகத்தை ஏமாற்றும் மட்டரக அரசியலை மேற்கொள்வோம் என்ற போக்கு இன்று பிரதானமாக இழையோடுகிறது.

இத்தகைய மனிதர்கள் வாழ்ந்ததற்கும் இன்று நிகழ்பவற்றிற்கும் என்ன சம்பந்தம். சுய நலமும்- ஏமாற்றும்- மோசடியும்தானே ஆதிக்கம் பெற்றிருக்கின்றன.

அர்ப்பணிப்புகளை திரிபுபடுத்துவதற்கும் கொச்சைப்படுத்துவதற்கும் முயற்சிகள் நிகழ்கின்றன.

இயக்கங்களில் இருந்து எஞ்சியவர்கள், சமூக நியாய உணர்வு கொண்டவர்களும் தான் இந்த அர்ப்பணிப்புகளின் தார்மீக வலுவை நிலைநாட்டவேண்டும்

எதிலுமே சம்பந்தப்படாதவர்கள், சுத்தமானவர்கள், மாண்டவர்களும் எஞ்சியவர்களும் தீண்டத்தகாதவர்கள் என்று கருதும் கயமைகள் பற்றி எச்சரிக்கையாய் இருப்போம். அவர்கள் ஏற்கனவே தமிழ் அரசியலில் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள்.

தவறுகளை மூடி மறைக்கமுடியாது. அவை உண்மையின் வெளிச்சத்தில் துருவப்படவேண்டும். ஆனால் உயிர் உட்பட எல்லாவற்றையும் இழக்கத் தயாராக இருந்தவர்களை என்றென்றும் எம் இதயத்தில் இருத்தி வைப்போம். இவர்களின் மரணத்தின் நிகரற்ற பெறுமதியை நாம் வரலாற்றில் நிலைநாட்டியாகவேண்டும்.

# கோழி இறைச்சி விலையும் குறைக்கப்படுவது அவசியம்

கொழும்பு, ஜூன் 14

கோழி இறைச்சி வியாபாரிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த வாரம் முதல் கோழி இறைச்சி கொள்வனவை புறக்கணிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

பிஸ்கட் விலை உயர்வைக் கட்டுப் படுத்த எந்த வழிவகை கையாளப்பட்டதோ, அந்த வழிவகை கோழி இறைச்சி விடயத்திலும் கையாளப் படும் என்று அந்த அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டார்.

டொலர் மதிப்பிழப்பால் கிடைக்கும் சலுகைகளை நுகர்வோருக்கு வழங்கவேண்டும் என கோழி இறைச்சி வியாபாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

எனினும் தற்போதுள்ள இக்கட்டான சூழலை பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டுவதற்கு வியாபாரிகள் முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட பழங்களின் விலை வெகுவாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் திராட்சைப்பழம் 2 ஆயிரத்து 690 ரூபாவாகவும், ஒரு கிலோ அப்பிள் 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

அத்துடன் உள்ளூர் பழ வகைகளின் விலையும் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

(அ)

## வடக்கு காற்றாலை...

எனினும், இந்தத் திட்டத்துக்கு மன்னாரிலும் பூநகரியிலும் மக்கள் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளனர். இந்தத் திட்டம் தொடர்பாக நேற்று பூநகரியில் நடந்த காற்றாலை மின்சார திட்டத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பான கூட்டம் முடிவு ஏதுமின்றி நிறைவடைந்ததாக அறிய வருகின்றது. அப்பகுதி மக்கள், மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, பூநகரியில் காற்றாலை மின் திட்டப் பணிகளை தொடங்க கடந்த ஒகஸ்ட் மாதமே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

மன்னாரில் 286 மெகாவாட் , பூநகரியில் 234 மெகாவாட் என 500 மெகாவாட் மின்சாரம் இந்தத் திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த இரு திட்டங்களுக்காகவும் அதானி நிறுவனம் 50 கோடி டொலர்களை முதலீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, காற்றாலை மின் திட்டத்துக்கு மன்னார், பூநகரியில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர். (ஐ)

## சப்ரகமுவ...

கொள்கை திட்டங்களை செயல்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

கடந்த காலங்களில் நாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த போதிலும் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்ட சரியான திட்டங்களின் பலனாக சாதகமான மாற்றங்களை காணமுடிகிறது. சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்திக்காக அர்பணிப்புடன் செயல்படுவேன்.

குறிப்பாக, சப்ரகமுவ மாகாண மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பில் விசேட அவதானம் செலுத்தும் அதேநேரம் அரசியல் கட்சி தலைவர்களின் ஆலோசனைகளையும் பெற்று அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கிறேன் - என்றும் கூறினார்.

சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ கடந்த 8ஆம் திகதி தனது பதவி விலகலை அறிவித்தார்.

கடந்த மே 17ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கிழக்கு, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியின்...

ஒத்துழைப்பு வழங்கினோம். ஒரு மாற்றத்தை நோக்கி ஜனாதிபதி பயணிக்கிறார். அவரின் கொள்ளை திட்டங்களை நிறைவேற்ற சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் என்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவது பிரச்னைக்குரியது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தும் என பல தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்கு வோம். அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவாக ஆராயவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் - என்றார். (ஐ)

## யூரியாவின்...

தீர்மானிக்கவேண்டும்.

50 கிலோ யூரியா உர மூடையின் விலை 10 ஆயிரம் ரூபாயாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அடுத்த...

குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் மருத்துவ சேவையை வலுப்படுத்தும் வகையில் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் மேலும் 406 மருத்துவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர். அடுத்த மாதத்துக்குள் 2 ஆயிரத்து 200 பேரை தாதியர் சேவைக்கு இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். (ஐ)

## வடக்கு...

தெரிவிக்கையில்,

நாளை முதல் இந்தியாவில் மீனவர்களின் மீன்பிடி தடைக்காலம் நிறைவடைகிறது. இந்த நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, தீவக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பான நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெறுகின்றன. இதனால் கடற்றொழிலாளர்களும் மீன் சாப்பிடும் மக்களும் பாதிக்கப்படுவர்.

டொலர் வருகிறது ஏற்றுமதி நடைபெறுகிறது என்பதற்காக அரசாங்கம் சட்டவிரோத தொழிலை கனகச்சிதமாக அனுமதிக்கிறது. கடற்றொழிலில் இருந்து வடக்கு கடற்றொழிலாளர்களை அந்நியப்படுத்தும் முயற்சி தற்போது இடம்பெற்று வருகின்றது. சீன கடலட்டைப் பண்ணைகளால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சட்டவிரோதமான தொழில் மற்றும் சீன கடலட்டைப் பண்ணை விவகாரங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியும் ஆறுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களும் மூன்று கடற்றொழிலாளர் சமாசங்களும் இணைந்து இந்த மனுவை எழுதியுள்ளோம் - என்றார். (ஐ)

## பதவிக்...

ஆக்கிரமிப்பு தொடர்பாக கடந்த வியாழக்கிழமை தமிழரசு கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டிருந்தனர். இந்தப் பேச்சில் பங்கேற்றிருந்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம், “அவற்றை நிறுத்த உத்தரவிட்டும் ஏன் நிறைவேற்றவில்லை?”, என்று வினவிய ஜனாதிபதி அவரை கடுமையாக கடிந்து கொண்டார்.

இந்த நிலையில், அண்மையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி விலகியிருந்தார். இந்த நிலையிலேயே நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மேலும், தொல்பொருள் தொடர்பில் வடக்கு , கிழக்கில் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் எவ்வித தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகக் காணப்படுகின்றமையால் ஒப்பந்த அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கு நியமனம் பெற்றிருந்தார். அதன் பின்னர் அவரது ஒப்பந்த காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீண்டும் பேராசிரியராக அவர் தனது பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதால் அவர் பதவியிலிருந்து விலகுகிறார் என்று கூறி கடிதத் குறிப்பிட்டு தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் என்றும் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் குண்டுவெடிப்பு உண்மைகள் விரைவில் வெளியாகும்!

## பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜூன் 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைத்து எம்மை ஏமாற்றி விட முடியும் என்று ஆட்சியாளர்கள் எண்ணுகின்றனர். ஆனால், மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த குற்றச் செயலுடன் தொடர்புடையவர்கள் ஒருவருக்கொருவர் தம்மை தாமே காட்டிக் கொடுத்து உண்மைகளை வெளிப்படுத்துவர் என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் திருவிழா செவ்வாய் கிழமை இடம்பெற்றது. இதன் போது விசேட ஆராதனையின் போது உரை நிகழ்த்துகையிலேயே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த திருத்தலத்திலும் குண்டு வெடித்ததல்லவா? இதனால் சுமார் 60 பேர் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் யார்? இது தொடர்பில் ஏதேனும் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனவா? உண்மைகளை சரியாக கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

நீதியும் நியாயமும் எங்கே? எம்மை ஏமாற்ற முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு எம்மை ஏமாற்ற முடியாது. எம்மை ஏமாற்ற நினைப்பவர்களே ஒரு ஏமாந்து போவர். இந்த திருத்தலத்தில் அப்பாவி பொது மக்களை கொன்றவர்கள் , அதற்கு ஒத்துழைத்தவர்கள் இன்று சமூகத்தில் சிறந்த இடங்களில் உள்ளனர்.

வெகுவிரைவில் அவர்கள் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படுவார்கள். அவர்களுக்குள் தங்களைத் தாங்களே காட்டிக் கொடுத்து உண்மைகளை வெளிப்படுத்துவர். அந்த நாள் வரை நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். சட்டம் , நீதியைப் பற்றி அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். நாளொன்றுக்கு ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அந்த சட்டங்கள் மூலம் மக்களின் குரல்களை முடக்கி அவர்களை சிறையிலடைத்து இவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவே எண்ணுகின்றனர். இடம்பெற்ற அனைத்து குற்றங்களையும் மூடி மறைத்துள்ளனர். அவ்வாறு குற்றங்களை முழுமையாக மறைத்து விட முடியாது. இறைவனின் சக்தி அதனை விட பலம்மிக்கது.

எனவே நீண்ட காலம் செல்லாமல் இந்த மனிதப்படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை இனங்காண அந்த இறைவன் எமக்கு உதவுவார் என்று நம்புகின்றோம் -என்றார். (ஐ)

# பூநகரி காற்றாலை மின்சார திட்டம் கால இழுத்தடிப்பை ஏற்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கிளிநொச்சி, ஜூன் 14

பூநகரி - கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தின் ஊடாக எமது மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயே தான் ஆர்வமாக இருக்கிறார் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறுகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களிலும், இன்றைய (நேற்றைய) சந்திப்பிலும் மக்கள் பிரதிநிதிகளாலும் அதிகாரிகளாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் - ஆலோசனைகள் மற்றும் வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை தெளிவான முறையில் அடையாளப்படுத்தி, அவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கௌதாரிமுனை காற்றாலை திட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பான விடேச கலந்துரையாடல் தொடர்பாக ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவை சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றின் முதலீட்டில் பூநகரி, கௌதாரிமுனையில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள காற்றாலைத் திட்டத்தின் காரணமாக கௌதாரிமுனை பிரதேசத்தினை சேர்ந்த மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகவும் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளதுடன், அடிப்படை, சமூக மற்றும் வாழ்வாதார நன்மைகளையும் ஏற்படுத்துவதற்கு இந்திய முதலீட்டாளர்களால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

கௌதாரிமுனை கிராமத்துக்கான சுமார் 17 கிலோமீற்றர் வீதியை காப்பெற் வீதியாக அமைக்கப்படவுள்ளது. சுமார் 40 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிகளும் உருவாக்கப்படவுள்ளன. இதே போன்று, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களால் உத்தவரவாதம் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டனில்...

விபத்தில், பி. எம். டபிள்யூ. காரில் பயணித்த மூவரே உயிரிழந்தனர் நான்காவது நபர் காயங்களுடன் மீட்கப்பட்டார். அடுத்த காரில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சிசெஸ்டர் நகர் அருகே கிராமப்புற வீதியில் ஆட்கள் நடமாட்டம் குறைந்த நேரத்தில் விபத்து இடம்பெற்றுள்ளது. இதனால் கார் விபத்து எவ்வாறு நடந்தது என்பது தொடர்பாக நேரில் கண்ட சாட்சியங்கள் இல்லாததால் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

திருமண கொண்டாட்டம் ஒன்றுக்காக கனடாவில் இருந்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் ஆகியோரே உயிரிழந்தனர். மகன் காயமடைந்துள்ளார் என்பதை லண்டன் தமிழ் வட்டாரங்கள் உறுதிசெய்தன. இவர்கள் பயணம் செய்த பி. எம். டபிள்யூ. காரைச் செலுத்திச் சென்றவர் எனக் கூறப்படும் இங்கிலாந்தில் வசிக்கின்ற உறவினரான பெண் ஒருவரும் விபத்தில் சாவடைந்துள்ளார். அவர்களின் பெயர் விவரங்கள் தெரியவரவில்லை.

இரண்டாவது காரில் பயணித்தவர்களின் விவரங்களும் தெரியவரவில்லை. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடக்காது

## அரசு நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 14

**ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பிலேயே தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது. நாடு இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர் உரிய நேரத்தில், உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஊடகங்களை அடக்கவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை

கொழும்பு, ஜூன் 14

ஊடகங்களை அடக்கவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை. அவர் ஒரு ஊடக குடும்ப பாரம்பரியம் கொண்ட தலைவர். குற்றவியல் சட்டத்தை ஒழித்தார் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

உத்தேச இலத்திரனியல் ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டமூலங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகங்களை ஒடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை. நாட்டில் ஊடக கலாசாரம் வளர்ச்சியடைவதற்கு தேவையான ஒழுங்குமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதற்காக சர்வதேச தரத்திலான முறைமை பின்பற்றப்பட வேண்டும்.

சில குறிப்பிட்ட வழக்குகளில் தனி நபர்களின் தனியுரிமையை மீறும் பத்திரிகையாளர்களை குற்றவியல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து தண்டிக்கும் திறன் நாட்டில் இருந்தது,

ஊடக தர்மம் தொடர்பில் நாட்டில், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இருந்தன. அதனை நீக்கியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, சில சந்தர்ப்பங்களில், ஊடகங்களுக்கு அதிக சுதந்திரம் வழங்கியதற்காக ஜனாதிபதி விமர்சிக்கப்பட்டார்.

இந்த உத்தேச சட்டமூலம் ஆங்கிலத்தில் இல்லை. ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டு அச்சிடப்பட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களில் சாதகமான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டால் அவை குறித்து விவாதிக்கலாம்.

நாகரீக சமூகத்தில் அச்சுறுத்தல்கள், அவமானங்கள், ஏளனங்கள் இல்லாத மேம்பட்ட ஊடகக் கலாசாரத்தை உருவாக்கத் தேவையான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது ஒரு வரைவு மட்டுமே. தேவைப்படும் போது திருத்தங்கள் செய்யலாம். பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் இதற்கான அதிகாரம் என்னிடம் உள்ளது - என்றார். (அ)

# முதல் தரமான நகைச்சுவை நடிகரே ஜனாதிபதி ரணில்!

## சாடுகின்றார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜூன் 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தினால், 60 சத வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இலங்கையில் இருக்கும் முதல் தர நகைச்சுவை நடிகர் ரணில் விக்கிரமசிங்க என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இருக்கும் முதல் தர நகைச்சுவை நடிகர் ரணில் விக்கிரமசிங்க. தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், எவருக்கும் 50 சத வீத வாக்குகள் கூட கிடைக்காது என அண்மையில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

நீதிபதிகள் கலந்துகொண்டிருந்த கூட்டத்தில் ஏன் ஜனாதிபதி இப்படி கூறினார் என்பது சிக்கலுக்குரியது.

ஜனாதிபதி நீதிபதிகளுக்கு மறைமுகமாக அழுத்தங்களை கொடுத்தாரோ என்ற கேள்வி எழுகிறது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதாகக் கூறி அரசாங்கம் எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தியது. இதனை எதிர்க்கட்சிகள் தற்போது புரிந்துகொண்டுள்ளன.

அடுத்து நடைபெறப்போவது ஜனாதிபதித் தேர்தல் என்றால், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக வாக்குறுதியளிக்கும் வேட்பாளர் அவசியம்.

தேர்தலுக்காக எந்த அர்ப்பணிப்புகளையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் என்றால், பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளவும் தயாராக இருக்கின்றோம்.

பொது வேட்பாளரை நிறுத்தினால், 60 சத வீத வாக்குகளை பெற முடியும். அவசர ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை திசை திருப்ப அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இதன் காரணமாக ஒளி,ஒலிப் பரப்பு அதிகார சபை சட்ட மூலத்தை கொண்டு வந்துள்ளது. மக்களுக்கு உண்மைகளைக் கூறும் ஊடகங்களின் வாயை மூட முயற்சிக்கின்றனர். அதேபோல் அரச மற்றும் தனியார் ஊடகங்களுக்கு விளையாட்டை காட்ட முயற்சிக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்காத ஊடக நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்களை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சித்து வருகிறது. இதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

சமூக ஊடகங்களில் சிலர் செய்யும் வேலைகளால் சகல ஊடக நிறுவனங்களும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றன - என்றார்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு தொடர்ந்தும் எச்சரிக்கை விடுக்கும் அமெரிக்கா, ஆஸி.

கொழும்பு, ஜூன் 14

அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கைக்கான பயண எச்சரிக்கை ஆலோசனைகளை தொடர்ந்தும் பேணுகின்றன.

இலங்கைக்குச் செல்லும் தங்களது நாட்டுப் பிரஜைகளை எச்சரிக்கையுடன் இருக்குமாறு குறித்த நாடுகள் தொடர்ந்தும் அறிவுறுத்துகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட அமெரிக்க பயண ஆலோசனையின்படி, எரிபொருள் மற்றும் ஔடத தட்டுப்பாடு, உள்நாட்டு அமைதியின்மை என்பன காரணமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இலங்கையில் பொருளாதார நிலைமை தொடர்பான போராட்டங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம்.

சில சந்தர்ப்பங்களில் போராட்டங்களில் ஈடுபடுபவர்களை கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகங்களை மேற்கொண்டதாக தெரிவித்து அமெரிக்கா பயண எச்சரிக்கை ஆலோசனையை கடந்த ஒக்ரோபர் மாதம் வெளியிட்டது.

எனினும் குறித்த பயண எச்சரிக்கை ஆலோசனை இதுவரை மாற்றப்படவில்லை.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவினால் வெளியிடப்பட்ட பயண ஆலோசனையானது, இன்றும் நடைமுறையில் உள்ளது.

உள்நாட்டு அமைதியின்மை, எரிபொருள் மற்றும் இதர பொருட்களின் பற்றாக்குறை காரணமாக இலங்கையில் உள்ள தங்களது நாட்டு பிரஜைகள் அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஒரு இலட்சம் மணி நேரத்தை நிறைவு செய்த எயார்பஸ்ஸை மீள கையளிக்கிறது இலங்கை

கொழும்பு, ஜூன் 14

பிரான்ஸிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட, சிறிலங்கன் விமான சேவையின் முதலாவது ஏ 330-200 ரக எயார்பஸ் விமானத்தின் குத்தகைக் காலம் முடிவடையவுள்ளது.

அதன்பின்னர் குறித்த விமானம் அதன் சொந்த நிறுவனத்திடம் மீள ஒப்படைக்கப்படவுள்ளது.

விமானங்களை உற்பத்தி செய்யும் பிரான்ஸின் எயார்பஸ் நிறுவனத்திடம் இருந்து சிறிலங்கன் விமான சேவை 23 வருடங்களுக்கு முன்னர் இந்த விமானத்தை குத்தகைக்கு எடுத்திருந்தது.

ஹீத்ரோ, பிராங்போர்ட், மெல்போர்ன் மற்றும் மொஸ்கோ உள்ளிட்ட நீண்ட இடங்களுக்கு இந்த விமானம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது சுமார் 100,000 விமான மணிநேரத்தை நிறைவு செய்துள்ளதாக சிறிலங்கன் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானத்தில் 18 வணிக வகுப்புப் பயணிகளும், 251 சிக்கன வகுப்புப் பயணிகளும் பயணிக்கும் வசதி உள்ளது. (அ)

# அமைச்சுப் பதவிகளை பெற்றவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இடைநிறுத்திய சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜூன் 14

கட்சியின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ள சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இடைநிறுத்தியுள்ளதாக சுதந்திரக்கட்சி அவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கையெழுத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த கடிதத்தில் கட்சியின் யாப்புக்கு அமைய எதிர்காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் கூடிய சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவில் இந்த தீர்மானம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழு உறுப்பினர்கள் இந்த தீர்மானத்துக்கு இணக்கத்தை வெளியிட்டுள்ளனர்.

மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கின் தீர்ப்பை ஆராய்ந்து, அதனை மதித்து, அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது.

இதனடிப்படையில், மகிந்த அமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, ஜகத் புஷ்பகுமார, லசந்த அழகியவண்ண, சாமர சம்பத் தசநாயக்க, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, சுரேன் ராகவன், சாந்த பண்டார ஆகிய 8 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும் தீர்மானத்தை இடை நிறுத்தியுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக கூறியுள்ள சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படவில்லை என அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.